
விலை ரூபா: 8.00 Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 மாசி 17 செவ்வாய்க்கிழமை (01.03.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 72




## ஆட்டோவில் சென்ற பெண் போராளிகள் மீது அம்பாறையில் நேற்றிரவு துப்பாக்கிச் சூடு

### மகளிர் பொறுப்பாளர் உட்பட மூவர் படுகாயம்

(அம்பாறை)

அம்பாறை மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் குவேனி உட்பட மூன்று பெண் போராளிகள் மீது நேற்றிரவு 7 மணியளவில் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது. சம்பவத்தில் படுகாயமடைந்த மூன்று பெண் போராளிகளும் அம்பாறை அஷ்ரப் வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

பண்சேனையில் நடைபெற்ற தியாகி திலீபன் மருத்துவமனைத் திறப்பு விழாவில் பங்குபற்றிவிட்டு திருக்கோவிலில் உள்ள அரசியல்துறைப் பணிமனைக்கு ஆட்டோ ஒன்றில் மூன்று பெண் போராளிகளும் திரும்பிக் கொண்டிருந்தனர். இதன்போது அக்கரைப்பற்று வீதியில் உள்ள தம்பட்டை என்ற இடத்தில் மோட்டார் சைக்கிள் (12 ஆம் பக்கம் பார்க்க)

## கஜேந்திரகுமார் எம்.பி பெல்ஜியம் பயணம்

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நேற்று பெல்ஜியம் பயணமானார்.

பெல்ஜியம் நாட்டின் தலைநகரான பிரசஸ்சில் சமஷ்டி அரசியலமைப்பு என்ற தொனிப்பொருளில் நாளை ஆரம்பமாகவுள்ள சர்வதேச மாநாடு ஒன்றில் கலந்து கொள்வதற்காக அந் நாட்டு அரசின் அழைப்பை ஏற்று அவர் அங்கு சென்றுள்ளார்.

இம் மாநாடு எதிர்வரும் 5 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. (ச)

# ஆளும் கூட்டணி அரசாங்கம் ஒருபோதும் வீழ்ச்சியடையாது

## அநுரா பண்டாரநாயக்கா தெரிவிப்பு

(கம்பஹா)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் ஒருபோதும் வீழ்ச்சியடையமாட்டாது. கூட்டுக்குள் குழப்பமாக இருந்தாலும் சரி, வேறு பிரச்சினைகளாக இருந்தாலும் சரி, அக்கட்சி வீழ்ச்சியடைய மாட்டாது என அநுரா பண்டாரநாயக்க உறுதிபடத் தெரிவித்துள்ளார். (12 ஆம் பக்கம் பார்க்க)

## நாளை பேரணி

### வர்த்தக நிலையங்கள் பூட்டப்படும்

(யாழ்ப்பாணம்)

அரசிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் போர்நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்தாகி 3 வருடங்கள் கடந்த நிலையில் அதனை உரியமுறையில் நடைமுறைப்படுத்தாமை - மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் உட்பட போராளிகள் படுகொலை செய்யப்பட்டமை - சுனாமியால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு துரிதமாக நிவாரண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமை என்பவற்றைக் கண்டித்து நாளை (12 ஆம் பக்கம் பார்க்க)


## சுனாமி தாக்கிய இடங்களை நேற்று இளவரசர் சாள்ஸ் பார்வையிட்டார்

(மட்டக்களப்பு)

பிரிட்டிஷ் இளவரசர் சாள்ஸ் நேற்று மட்டக்களப்புக்குச் சென்றார். அங்கு சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை பார்வையிட்டார்.

ஆறு மணித்தியால இலங்கைக்கான விஜயத்தை மேற்கொண்டு கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்த இளவரசர் சாள்ஸ் அங்கிருந்து விசேட உலங்குவானூர்தி மூலம் மட்டக்களப்பு வெபர் விளையாட்டரங்கை சென்றடைந்தார். அவரை அரசாங்க அதிபர் வேல்முருகு சண்முகம், இராணுவத்தைச் சேர்ந்த உயரதிகாரிகள் மற்றும் பொலிஸ் உயரதிகாரிகள் ஆகியோர் வரவேற்றனர்.

வெபர் மைதானத்திலிருந்து வாகன தொடரணியாக நாவலடி, திருச்செந்தூர் மற்றும் டச்பார் ஆகிய இடங்களுக்கு அழைத்துச்செல்லப்பட்ட இளவரசரை இலங்கை செஞ்சிலுவைச்சங்க குழுவின் மட்டக்களப்பு மாவட்ட கிளைத் தலைவர் ரி. வசந்தராஜா மாலை சூட்டி வரவேற்றார். அதனைத் தொடர்ந்து (12 ஆம் பக்கம் பார்க்க)



## பாதிக்கப்பட்ட மக்கள் வழமைக்கு திரும்ப பிரிட்டன் உதவி புரியும்

### ஜனாதிபதியிடம் சாள்ஸ் உறுதி

(கொழும்பு)

சுனாமியால் பாதிக்கப்பட்ட இலங்கை மக்களின் ஜீவனோபாயத்தை மீளக்கட்டியெழுப்புவதற்கு பிரிட்டனால் வழங்கப்பட்டுவரும் ஒத்துழைப்பும் நிவாரண உதவியும் தொடர்ந்தும் பாகுபாடின்றி வழங்கப்படும் என்று பிரிட்டனின் முடிக்குரிய இளவரசர் சாள்ஸ் தெரிவித்தார்.

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு வீடுகளையும் தொழில்துறைகளையும் இழந்தவர்கள் துரிதமாக மீளக்கட்டியெழுப்பப்படுவார்கள் என்று நம்புவதாக அவர் தெரிவித்தார்.

நேற்றுக் காலை இலங்கை வந்தடைந்து மட்டக்களப்புக்குச் சென்று அப்பகுதிகளைப் பார்வையிட்டுள்ளார். இளவரசர் சாள்ஸ், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவை சந்தித்துக் கலந்துரையாடிய போதே இதனைத் தெரிவித்தார்.

இயற்கை அனர்த்தத்தால் ஏற்பட்ட சேத விபரம் மற்றும் (12 ஆம் பக்கம் பார்க்க)

## 3 இராணுவ அதிகாரிகளுக்கு சேவை நீடிப்பு கிடைத்தது

(கொழும்பு)

இலங்கை இராணுவத்தின் மூன்று சிரேஷ்ட அதிகாரிகளுக்கு சேவை நீடிப்பினை வழங்க ஜனாதிபதி நேற்று முடிவு செய்திருக்கின்றார்.

இராணுவத்தின் பிரதான அதிகாரி மேஜர் ஜெனரல் சரத்பொன்சேகா, பிரதி பிரதான அதிகாரி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால மற்றும் தொண்டர் படைப் பிரிவின் தளபதி மேஜர் ஜெனரல் நந்தபல்லவராய்ச்சி ஆகிய அதிகாரிகளுக்கே சேவை நீடிப்பு (12 ஆம் பக்கம் பார்க்க)

## அரசுடன் இணைந்து செயற்பட இ.தொ.காங்கிரஸ் இணக்கம்

### ஜனாதிபதியுடனான சந்திப்பில் முடிவு

(கொழும்பு)

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசில் அங்கம் வகிக்கும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் அமைச்சர்கள் இருவர் ராஜினாமாக் கடிதங்களை சமர்ப்பித்ததிலிருந்து எழுந்த அரசியல் நெருக்கடி நேற்று சுமுகமாக தீர்ந்துள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை சந்தித்துப் பேசிய இ.தொ.க. தலைவர் ஆறுமுகம் தொண்டமான் உட்பட 11 பேர் அடங்கிய குழுவினர் தங்களது கட்சி தொடர்ந்தும் கூட்டணி அரசில் நீடித்து நிலைத்திருக்கும் என்று அறிவித்துள்ளனர்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த கட்சியின் மூத்த துணைத் தலைவர் நாம் 14 அம்சக் கோரிக்கையினை முன்வைத்துத்தான் அரசாங்கத்தில் இணைந்தோம். இந்தக் கோரிக்கைகளை அமுல் செய்வதில் தாமதம் ஏற்படுவதனால் அமைச்சர்கள் தமது (12 ஆம் பக்கம் பார்க்க)

## எரிக்சொல்ஹெய்ம் இந்தியா பயணம்

(கொழும்பு)

நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் தமது இலங்கை விஜயத்தை முடித்துக்கொண்டு நேற்றுப் பிற்பகல் இந்தியத் தலைநகர் புதுடில்லியைச் சென்றடைந்தார்.

கடந்த வாரம் இலங்கைக்கு விஜயம் செய்த விசேட தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே கைச்சாத்தான யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின் மூன்றாம் (12 ஆம் பக்கம் பார்க்க)

# பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு விரைவில் ஆடம்பர வாகனங்கள்!

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் விரைவில் ஆடம்பர வாகனங்கள் வழங்கப்படவுள்ள.

பாராளுமன்ற விவகார அமைச்சர் மில்றோய் பெர்னாண்டோ இத்தத் தகவலைத் தெரிவித்தார்.

இது தொடர்பிலான அமைச்சரவைக் கடிதம் விரைவில் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. இதற்கு ஏற்கனவே திறைசேரி சம்மதம தெரிவித்துளளது அமைச்சரவையும சம்மதித்தால் ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினர்களும் இதனைப் பெறுவார்கள்.

அரசாங்கம் பாராளுமன்ற உறுப்பினர்களுக்குச் சிறந்த வாகனங்களை வழங்கத் திட்டமிட்டுள்ளது. இதற்கு முன்னைய அரசாங்கமும் இதற்கென வாகனங்களை இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்திருந்தது. ஆனால், இன்றுவரை யாருக்கும் அவை வழங்கப்படவில்லை. சுனாமி ஏற்பட்டபின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வாகனங்கள் வழங்கும் தேவை ஏற்பட்டுள்ளது.

இதன்மூலம் இவர்கள் நிவாரண நடவடிக்கைகளை இலகுவாக முன்னெடுத்துச் செல்லமுடியும் என்றும மில்றோய் பெர்னாண்டோ கூறினார்.

இதைவிட, பல சட்டத்தரணிகளும் தமக்கு வாகனங்கள் தேவை என வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதேவேளை, வாகனங்களைவிட செல்லிடத் தொலைபேசிகள், தட்டச்சு இயந்திரம், நிழற்படப்பிரதி இயந்திரம் என்பனவும் இவர்களுக்கு வழங்கப்படவுள்ளன. இவை 5 வருடங்களுக்கு.ஒரு தடவை புதிதாக வழங்கப்படுவதாக இருந்தது.

இதனைத் தற்போது 3 வருடங்களாக அரசாங்கம் குறைத்துள்ளது. (ր-6)

# வடமராட்சி கரையோரப் பிரதேசங்களைச் சேர்ந்த சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு லயன்ஸ் கழகம் உதவிகளை வழங்கியது

(பருத்தித்துறை)

சுனாமி ஆழிப்பேரலையால் பாதக்கப்பட்ட கரையோர மக்களுக்கு வடமராட்சி லயன்ஸ் கழகத்தினர் துவிச்சககரவண்டி, காசோலை, மூக்குக்கண்ணாடி, மருந்துப் பொருட்களை என்பவற்றை வழங்கினர். அந்தவகையில் கடந்த 27 ஆம திகதி காலை 9.00 மணியளவில் வடமராட்சி லயன்ஸ கழகத தலைவர் லயன்ஸ் மு.தர்மலிங்கம் தலைமையில் பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

இங்கு சுனாமியால் பாதிக்கப்பட்ட கரையோர வாழ் மாணவர்கள் ஐவருக்கு துவிச்சக்கர வண்டியும், சுனாமி ஆழிப்பேரலையால் காவு கொண்ட பத்து குடும்பங்களைச் சேர்ந்த 6 பேருக்குத் தலா 5 ஆயிரம ரூபா காசோலைகளும் 4 பேருக்குத் தலா 2500 ரூபா காசோலைகளும் வழங்கப்பட்டதுடன். 350 பேருக்கு மூக்குக்கண்ணாடியும் வழங்கப்பட்டது.

தொடர்ந்து பல் வைத்தியத்தினை வைத்தியர் ஜெயராஜாவும் பொது வைத்தியத்தினை பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி கதிரவேல்பிள்ளை மேற்கொண்டார்.இதில் 400 பேர் வரை கலந்துகொண்டனர்.

இதற்கு அனுசரணையாளர்களாக பருத்தித்துறை வர்த்தக சங்கத்தினர் சிலோன் அசோசியேசன் ஒவ்வேக் மலேசியா பொறியியலாளர் தேவசிகாமணி, வி.எம்.ரஞ்சன், வி.எம்.ரமேஷ், லயன்ஸ் எஸ்.எம். பெர்னாண்டோ நிறுவனத்தினர் பங்கு கொண்டனர். (ப-113,35)

# சுனாமிப் பேரலையால் பாதிப்புற்ற மீனவர்களுக்கு படகுகளை வழங்க அயர்லாந்து அரசு இணக்கம்

(கொழும்பு)

சுனாமியால் பாதிக்கப்பட்ட இலஙகை மீனவர்களுக்கு 500 படகுகளை வழங்க அயர்லாந்து அரசு முன்வந்துள்ளது.

இலங்கை அயர்லாந்து நம்பிக்கை நிதிப்பிரிவு இதற்காக 25 கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளது.

அம்பாந்தோட்டை மாவட்ட மீனவர்களுக்கு வழங்கப்படவுள்ள 100 படகுகளில் ஒன்று கடந்த சனிக்கிழமை அலரிமாளிகையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டது.

படகு, வலைகள் மீன்பிடிக்குத் தேவையான பொருட்களும் கையளிக்கப்பட்டன.

ஒரு படகுக்கான செலவு 50 இலட்சம் ரூபாவுக்குமதிகமாகும்.

ஏற்கனவே பேருவளையிலுள்ள மீனவர்களுக்கு 50 படகுகள் வழங்கப்பட்டுள்ளன.

அயர்லாந்து நம்பிக்கை நிதிப் பிரிவின் உதவியுடன் இப்படகுகள் இலங்கையிலேயே நிர்மாணிக்கப்பட்டுள ளமை குறிப்பிடத்தக்கது. (க-7)

# கரையோரப் பாடசாலைகளில் கல்விபயிலும் ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு சத்துணவுப் பொதிகள் வழங்கப்படும்

(கொழும்பு)

சுனாமி அனர்த்தம் காரணமாக கரையோரப்பிரதேச பாடசாலைகளில் கல்வி பயிலும் ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு இலவசமாக சத்துணவுப் பொதிகள் வழங்கப்படவுள்ளன.

நாட்டின் தென்பகுதி மற்றும் வடக்கு-கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த தரம்1 தொடக்கம் தரம் 5 வரையிலான வகுப்பு மாணவர்களுக்கே இச்சத்துணவுப் பொதி வழங்கப்படவுள்ளது.

தென்பகுதியைச் சேர்ந்த 15 ஆயிரம் மாணவர்களுக்கு சத்துணவு வழங்கப்படவுள்ளது.

உலக உணவுத்திட்ட நிறுவனம், உலக தரிசன நிறுவனம் மற்றும் புனர்வாழ்வு,புனரமைப்பு மற்றும் மீள்குடியமர்த்துகை அமைச்சு ஆகியன இணைந்து இந்தத் திட்டத்தை அமுல்படுத்தவுள்ளன.

சத்துணவுகளைத் தயாரித்து தமது பிள்ளைகளுக்கு வழங்குவது தொடர்பாக பெற்றோர்களுக்கு விளக்கமளிக்கும் விழிப்பூட்டல் செயலமர்வுகளையும் நடத்துவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ր-9)

# 12 ஈழத் தமிழர்கள் தாயகம் திரும்பினர்

தமிழ்நாட்டிலிருந்து கூட்டிவரப்பட்டு நடுக்கடலில் உள்ள மணல் திட்டில் அநாதரவாக இறக்கிவிடப்பட்ட 12 ஈழத்தமிழ் அகதிகள் இலஙகைக் கடற்படையினரால் மீட்கப்பட்டு தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

தனுஷ்கோடிக்கும் இராமேஸ்வரத்துக்கும் இடையில் உள்ள மணல் திட்டிலேயே இவர்கள் இறக்கிவிடப்பட்டிருந்தனர்.

மீட்கப்பட்டவாகளில் நான்கு ஆணகள் மூன்று பெண்களும் மீதிப்பேர் குழந்தைகள் ஆவா. இவாகள் உடனடியாக மன்னார் மாஜிஸ்ரேட் நதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டதை அடுத்து இவர்களை இவர்களது சொந்த இடங்களில் சேர்க்க ஆவண செய்யுமாறு பதில் மாஜிஸ்ரேட் ஜோன்தாஸன் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

தனுஷ்கோடியிலிருந்து இந்திய படகோட்டிகளுக்கு நாற்பதாயிரம் ரூபா செலுத்தி தாம் கடந்த ஞாயிற்றுக்கிழமை புறப்பட்டதாகவும் இதுதான் இலங்கைக் கடல் எல்லை என்று கூறி அவர்கள் தம்மை நடுக்கடலில் இறக்கிவிட்டு சென்றுவிட்டார்கள் என்றும் மீட்கப்பட்டவர்கள் கூறினர். (ப)

# இராசி பலன்

01.03.2005

மாசி 17, செவ்வாய்க்கிழமை

பஞ்சமி முற்பகல் 11.59 மணிவரை

சுவாதி பிற்பகல் 5.30 மணிவரை

இராகுகாலம் 3.27 - 4.57 மணிவரை

சுபநேரம் 10.57 - 12.27 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | திடீர் பயணம், அபூர்வ சந்திப்பு, தொழில் விருத்தி, காரிய அனுகூலம். |
| இடபம் | சுகவாழ்வு, பணவருவாய், நிலை மாற்றம், முயற்சி கைகூடும். |
| மிதுனம் | வியாபார நன்மை, தாழ்ந்த சுபாவம், சொத்துக்களால் கவலை, வேலைச் சுமை. |
| கடகம் | அற்பர் நேசம், பயந்த சுபாவம், காரிய தாமதம், மாதா சுகம். |
| சிங்கம் | உற்சாகம், இனிய அனுபவம், அந்நியர் சந்திப்பு, வாக்கு மேன்மை. |
| கன்னி | மதிப்புக் குறைவு, பொருள் விரயம், காரிய தடங்கல், திடீர் நன்மை. |
| துலாம் | ஜனவசியம், ஆழ்ந்த சிந்தை, நண்பர்கள் உதவி, சயன சுகம். |
| விருச்சிகம் | உணர்ச்சிவ்சப்படுதல், பணவிரயம், காரிய தாமதம், பிரயாணம். |
| தனுசு | தொழில் சிந்தை, நண்பர்கள் சந்திப்பு, காரிய சித்தி, புதிய சிந்தை. |
| மகரம் | சுப நிகழ்வு, அதிகாரம், தடைப்பட்ட காரியம் கைகூடும், பொருள் சேர்க்கை. |
| கும்பம் | மந்த நிலை, ஆன்றோர் மதிப்பு, வீண்பயம், உடல் உழைப்பு. |
| மீனம் | அமைதிக் குறைவு, தொழில் கஷ்டம், காரிய தடங்கல், வீண் பிரச்சினை. |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது

-வளவன்

# ஐயன் கேணியில் துப்பாக்கிச்சூடு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு ஏறாவூர் ஐயன் கேணிப் பிரதேசத்தில் நேற்று முன்தினமிரவு துப்பாக்கிச் சூட்டுச்சத்தங்கள் கேட்டதாக அப்பிரதேசத்திலிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இராணுவத்துடன் சேர்ந்து இயங்கும் தமிழ் ஆயுதக் குழுவைச் சேர்ந்த சிப்பாயொருவர் விடுமுறையில் அந்தப் பிரதேசத்தில் தனது வீட்டில் தங்கியிருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

இவரது வீட்டில் இராணுவச் சிப்பாய்கள் பாதுகாப்பிற்காக நின்றதாகவும் நள்ளிரவில் இந்த துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தையடுத்து தாமும் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாக இராணுவத்தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன. (ப)

# நிர்வாகம் தெரிவு

(தென்மராட்சி)

யாழ்.மாவட்டக் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் புதிய நிர்வாகத் தெரிவு அண்மையில் யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிமனையில் நடைபெற்றது.

இத்தெரிவின்போது புதிய தலைவராக முன்னாள் கல்விப் பணிப்பாளர் செல்வி.தி.பெரியதமபியும் உப தலைவராக கல்விப்பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரனும், செயலாளராக அ.மு.அருணாசலமும், உப செயலாளராக ஆ.சி.நடராஜாவும், பொருளாளராக வே.ஞானகாந்தனும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், 14 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். (ր-16)

# சித்திரப் போட்டி

(தென்மராட்சி)

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணத்திலுள்ள சுகவாழ்வு நிலையம் 'யாழ்மாதின் உழைப்பும் ஊதியமும்' எனும் கருப்பொருளில் சித்திரப்போட்டி ஒன்றினை நடாத்தவுள்ளது.

இப்போட்டியில் அனைதது வயதினரும பங்குபற்றலாம் எனறும், பங்குபற்றுவோர் தமது படைப்புக்களை 18"x14" அளவில் தாம் விரும்பிய வர்ணங்களில் வரைந்து எதிர் வரும் மார்ச் மாதம் 5 ஆம் திகதிக்கு முன்னர் 'இணைப்பாளர், சுகவாழ்வு நிலையம், யூ.எஸ்.எயிட் திட்டம் 16,3ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்' எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

இப்போட்டியில் வெற்றியீட்டுவோருக்கு முதலாவது பரிசாக ரூபா 3 ஆயிரமும் இரண்டாவது பரிசாக ரூபா 2ஆயிரமும் மூன்றாவது பரிசாக ரூபா ஆயிரமும் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ր-16)

# ஆயுதக் குழுவுக்கு அதிகாரசபை எதற்கு?

## இப்படி கேட்கிறார் ஹெல உறுமய எம்.பி

(கொழும்பு)

ஆயுதம் தாங்கிய அமைப்பு ஒன்றுடன் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது அரசு பொறுப்புடனும், தேசிய இணக்கப்பாடடுனும செயற்பட வேண்டுமென ஜாதிக ஹெல உறுமயவின் பாராளுமன்ற குழுத்தலைவர் அத்துரலிய ரத்தின தேரர் தெரிவித்துள்ளார்.

அநுராதபுரத்துக்கு கடந்த சனியன்று விஜயம் மேற்கொண்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இடைக்கால நிர்வாகசபை யோசணை சர்வதேச ரீதியாக இலங்கைக்கு பாதகமானதாகும்.

இவ்வாறான ஒரு நிலைமையை ஜாதிகஹெல உறுமய வன்மையாகக கண்டிகின்றது. வடக்கு-கிழக்கில் தீவிரவாத அமைப்புடன் தொடர்புடையதாக இடைக்கால நிர்வாக சபை ஒனறை அமைப்பது என்பது மிகவும் பாதகமான யோசனையாகும். இந்த அதிகாரசபையென்ற யோசனையை விரிவாக ஆராய்ந்து பார்த்தால் அது தீவிரவாத அமைப்புக்களுக்கு ஏற்புடையதல்ல.

அதைவிட ஆயுதக்குழுவொன்றுடன் அதிகாரசபையை அமைப்பது என்பது கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்-சிங்கள மக்களின் உரிமைகளை இல்லாதொழிக்கும் செயறபாடாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (த-8)

# திருமலையில் கனேடிய நலன்புரிச்சங்கம் உதவி

திருகோணமலை சமூக பொருளாதார அபிவிருத்தி நிறுவனம் கனடாவில் உள்ள திருகோணமலை நலனபுரிச்சங்கத்தின் அனுசரணையுடன் பல வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.

அந்த வகையில் ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு மீன வியாபாரத்தில் ஈடுபடும் நால்வருக்கு துவிச்சக்கர வண்டிகளையும், திரியாய் மகாவித்தியாலயம், நொச்சிக்குளம் வித்தியாலயம் என்பவற்றில தொண்டர் ஆசிரியர்களாக கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு தலா 3 ஆயிரம் ரூபாவும், அடம்போடை பாலர் பாடசாலை ஆசிரியர்கள் இருவருக்கு 2ஆயிரம் ரூபாவும் வழங்கியுள்ளது. அத்துடன், ஆலங்கேணியில் இருதய நோயால் பாதிக்கப்பட்ட ஏழு வயதுச்சிறுவனுக்கு 1இலட்சத்து 85ஆயிரம்ரூபா பணமும் வழஙகப்பட்டது. (ப)

# அகவை ஐம்பதின் பொன்விழா சிறப்பிதழ்



ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக
ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள்
நல்லை திருஞானசம்பந்தர் ஆதினம்.

## அருள் ஆசிச் செய்தி

அன்புள்ளவர்களிற்கு !

திரு. வரதராஜா அவர்களின் 50வது பிறந்த தினத்தை இட்டு மகிழ்ச்சி அடைகிறோம். தனியார் கல்வி நிலையத்தினுடாக நீண்டகாலமாக கல்விப் பணியாற்றிய பெருமைக்குரியவர். தனது ஐம்பதாண்டு கால வாழ்க்கைக் காலத்தில் இருபத்தைந்து ஆண்டுகளுக்கும் மேலாக குருபணி ஆற்றி வருவது பாராட்டுதற் குரியதாகும்.

எக்ஸ்பிறஸ் என்னும் தனியார் கல்வி நிலையத்தின் மூலமாக ஆயிரக்கணக்கான மாணவர்களை நல்வழிப்படுத்தி அவர்களின் கற்றல் செயற்பாட்டின் வளர்ச்சிக்கு உதவியதன் மூலம் பலரதும் வரவேற்பையும், மதிப்பினையும் பெற்றவர் திரு. வரதராஜா ஆவார்.

இன்று பொன்விழா காணுகின்ற திரு. த.வரதராஜா அவர்கள் சிறப்புற்று நலமோடு வாழவும், தொடர்ந்து கல்விப் பணியினை சிறப்புற செய்யவும் இறைவன் ஆசீர்வதிக்கப் பிரார்த்திக்கிறோம்.

'என்றும் வேண்டும் இன்ப அன்பு'

## நிறுவன ஆசிரியர்களின் நெஞ்சங்களிலிருந்து

"தோன்றிற் புகழொடு தோன்றுக..." என்ற வள்ளுவன் வாக்கிற்கு அமைய மாணவர்கள் மத்தியில் , ஏன் ஆசிரியர்கள் மத்தியிலும் கூட ஒரு புகழ் பூத்த ஆசானாகத் திகழ்பவர் எமது எக்ஸ்பிறஸ் அதிபர் என்றால் அது மிகையாகாது. "விளையும் பயிரை முளையில் தெரியுமென்பார்கள்" சிறுவயதிலிருந்து எத்தனையோ இன்னல்கள் மத்திலும் வாழ்ந்து வளம் மிக்க மனிதராகத் திகழ்ந்து தான் வாழும் சூழலில் உள்ளவர்களுக்கு ஏதாவது செய்யவேண்டும் என்ற உயர்ந்த எண்ணத்தோடு காலத்திற்குக் காலம் பல இடையூறுகளையும் பல துர்ப்பாக்கிய நிகழ்வுகளையும் சந்தித்தும் மனம் தளராது 'எண்ணித்துணிக கருமம் துணிந்த பின் எண்ணுவம் என்பது இழுக்கு' என்ற உயர் நோக்கத்தோடு தான் எடுத்துக்கொண்ட பணியை எள்ளளவும் கூட சளைக்காது இன்றுவரை செயலாற்றி வரும் எம் அதிபர் இன்று பொன்விழாக் காண்கின்றார்.

இப் பொன்விழாவினைக் கொண்டாடுவதற்கு எமது அதிபரைப் பல வழிகளில் வற்புறுத்தியே நாம் இணங்க வைத்துள்ளோம். இதனை இங்குள்ள மாணவர்களே நன்கு அறிவர். இவ் விழாவிற்குப் புலம் பெயர்ந்த மாணவர்கள் ,பழைய மாணவர்கள், ஆர்வலர்கள் என்று பலரிடமிருந்தும் நிதிகள் அன்பளிப்பாக எமக்குக் கிடைத்துள்ளன. அவர்களுக்கு இந்தநேரத்தில் எமது அன்பு கலந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

எவ்வெவ் இடர் வரினும் அவற்றிற்கு முகம் கொடுத்து நிறுவன வளர்ச்சிக்கும், அதன் முழுமையான சேவைக்கும் நாம் எந்த நேரத்திலும் எப்போதும் ஆதரவு வழங்குவோம் என்பதை இங்கு கூறிவைக்க விரும்புகின்றோம். 'காய்க்கும் மரத்திற்கு கல்லெறி விழும்' எமது அதிபர் பட்ட மரம் அல்லர். என்றும் காய்க்கும் மரமே! அதிபரின் தொடர்ச்சியான சேவைக்கு எமது வாழ்த்துக்களும் ஆசிகளும் என்றென்றும் உண்டு என்பதை மனநிறைவோடும் மனமகிழ்வோடும் கூறுகின்றோம்.

"கணிதம் என்றால் வரதர், வரதர் என்றால் கணிதம்" என்று ஆசிரியர் மத்தியிலும் "கணிதம் என்றால் அது வரதன் சேர்தானடா" என்று மாணவர்கள் மத்தியிலும் பெருமையோடு பேசப்படுகின்ற எம் அதிபர் எத்தனையோ பல அறிஞர்களை, ஆசான்களை, கவிஞர்களை, கலைஞர்களை, வைத்தியகலாநிதிகளை, பொறியியலாளர்களை தமிழ் கூறும் நல்லுலகத்திற்கு தானும் தன்னுடைய கட்டுக்கோப்பும் மிக்க ஆசிரியர்குழாத்துடனும் சேர்ந்து உருவாக்கி மனிதசமூகமே பிரமிக்கக் கூடிய விதத்தில் தன் கல்விப் பணியினை இன்றும் தொடர்ந்து கொண்டிருக்கின்றார். இப்பணி மென்மேலும் தொடர வேண்டும். இன்னும் பல விற்பனர்கள் தோன்றவேண்டும். அதற்கு எமது அதிபர் செய்யும் ஒவ்வொரு செயற்பாட்டிலும் அவரோடு பின்னிப்பிணைந்து செயற்படும் ஆசிரியர்கள் கைகொடுக்க சித்தமாக இருக்கிறார்கள் என்றால் அது மாணவர் சமுதாயம் செய்த வரப்பிரசாதமே.

வரதன் சேர் என்றால் கண்டிப்பானவர். ஆம் மாணவர்களோடும் சரி ஆசிரியர்களோடும் சரி நியாயத்திற்கு அப்பால் செல்லாது கடமை உணர்வோடு மாணவர்களின் எதிர் காலத்தைக் கருத்தில் கொண்டு கண்டிப்போடு செயற்படுபவர். ஆனால் அவர் உள்ளத்திலோ கள்ளமில்லை கபடமில்லை, வைத்துச்சாதித்து வாட்டும் பழக்கமில்லை. ஒவ்வொருவருடைய நிலையறிந்து அவர்களுடைய நிலைக்குத்தக்கவாறு தன்னுடைய வியூகத்தை மாணவர் சமுதாயம் என்றும் வளம் பெறவேண்டும் என்ற எண்ணத்தோடு செயற்படுகின்ற எமது நிறுவன அதிபர் இன்னும் பல சிறப்புக்களும் பெற்று மேலும் பற்பல விழாக்காணும் விதத்தில் வளம் பெற்று வாழ எல்லாம் வல்ல கற்பக விநாயகர் அருள்பாலிக்க வேண்டும் என்று ஆசிரியர்கள் ஆகிய நாம் வேண்டிநிற்கின்றோம்.

வாழ்க வரதர் புகழ்
வளர்க அவர் நாமம்

The Express Institute
Irupalai, Kopay.
ஆசிரியர்கள் குழாம்




எமது அதிபரும் கணித ஆசானுமாகிய

## உயர்திரு த.வரதராஜா அவர்கள்

பொன்விழா கௌரவிப்பு நிகழ்வுகள்

**இடம்: எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட் பிரதான மண்டபம்**

**தலைவர்: திரு. க.தேவராஜா - வணிகத்துறை தலைவர், யாழ் பல்கலைக்கழகம்.**

**இன்று பிற்பகல் 3.45 மணிக்கு நடைபெறும்.**

வரதர் பொன்விழாச் சபை

## நிறைநாள் வாழ்த்துக் கவி

காப்பு

அன்பால் அறுகால் தளிரால் மலரால்
அடியிணை பணிந்தேன் ஐங்கரன் காக்க

சேவை செய்யும் உள்ளம் என்றும் தெய்வம் வாழும் இன்ப
வீடு சேர்ந்திருந்து வாழ்த்துகிறோம் தேவலோகம் தானுமிடோ

இருபாலை எக்ஸ்பிறஸின் எமததிபர் வரதராஜா
அகவை ஐம்பதாண்டு இன்று ஆயுள் நூறுகோடி ஆண்டு
பாடு தென்னங்கீற்றே வாழ்த்து பாடு தென்னங்கிளியே வாழ்த்து
சேவை செய்யும்..................
மாமனை தொட்ட தென்றல் மண்குடிசை தொட்டுப் போகும்
மாணவர்க்கு கல்வி தந்தீர் மனசிலே சமத்துவமாய்
நினைவினிலே நிற்கும் கணிதம் நீரது மலரின் நீட்டம்
சாதனையாளன் சேவை வாழி நூறாண்டு காலம் வாழி நூறாண்டு காலம்
சேவை செய்யும்...................
தெள்ளு தமிழ் வள்ளுவனார் சொன்ன தமிழ் நீதி
தேன் தமிழும் சிவநெறி போல் வாழவேண்டும் நீல வானே
வம்ச விளக்கோடு நீங்கள் வாழி பல்லாண்டு
சேவை செய்யும்.................
நிலவுக்கு நிறமது போனது இல்லை
நெறிமுறை காப்பது நீதியின்பாதை
துணிவுக்குள்ளாடும் துறவியின் மனசே
கணிதத்துறை தரும் வரதரின் சேவை
வைர மழைத்துளி போலவே வாழி
வாழ்க்கை விளக்கொடு வாழி நீர் நீடு
சேவை செய்யும்.................

சுபம்

'வித்ய சேவா சத்தியன் பூஜா'

The Express Institute
கல்விச் சமூகம்




Fr. A.F. Celestine Mascaringhe OMI
Parish Priest
Kopay - Thirunelvely Parish.

## ஒழுக்கமுள்ள கல்வியை வழங்கியிருக்கிறார்

'வாழ்வென்னும் அருங்கொடையாக இறைவனைப் போற்றுவோம்' இருபாலை எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட் அதிபரும் பிரபல கணித ஆசானுமாகிய திரு. த.வரதராஜா அவர்களின் 50வது அகவையில் அவரை வாழ்த்துவதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

மானிட உருவாக்கத்தில் கல்வியும் ஒழுங்கும் முதன்மை பெறுகின்றன. இவற்றை மாணவ சமுகத்திடையே நடைமுறைப்படுத்த அரும்பணி புரிகிறார். 'எழுத்தறிவித்தவன் இறைவனாவான்' திரு. வரதராஜா அவர்கள் வெறுமனே கல்வியை மட்டுமல்ல ஒழுக்கமுள்ள கல்வியைக் கொடுப்பதில் முனைந்து நிற்கின்றார். மாணவ சமூகம் கல்வியையும், ஒழுக்கத்தையும் தமதிருகண்களாக மதித்து வாழ வழிகாட்டுகிறார்.

இப்பணி தொடரவும், அதன் வழி மேன்மையடையவும், சகல நலன்களும் பெற்று நலமுடன் வாழவும் இறையருள் வேண்டுகிறேன்.



க.தேவராஜா
வணிகத்துறைத் தலைவர்
யாழ் கல்கலைக்கழகம்

## மாணவர் நலன் நோக்கிய நல்லாசிரியன்

யாழ்ப்பாணத்தில் தனியார் கல்வியை வளர்ப்பதில் முன்னணி வகித்த திரு வரதராஜா அவர்களின் பொன்விழாவிற்கு வாழ்த்துச் செய்து வழங்குவதில் நான் பெருமையடைகின்றேன். இருபாலையில் 'எக்பிறஸ் இன்ஸ்ரிரியூட்' என்றாலே கட்டுப்பாட்டுக்கும், கல்விக்கும் தனியிடம் வகிப்பதாகும். அங்கு கல்வி கற்கும் மாணவர்கள் மட்டுமன்றி ஆசிரியர்களும் தமக்கென தனியான நடத்தையையும் ஆளுமயையும் கொண்டிருக்கிறார்கள் எனக் கூறினால் அது மிகையாகாது. அக்கல்வி நிறுவனத்தின் தந்தை எனப் புகழப்படுபவர் இன்று பொன்விழாக் காணும் திரு வரதராஜா ஆவார்.

திரு வரதராஜா எமது குடும்ப நண்பர் மட்டுமன்றி எனது ஆசிரிய சேவையிலும் பங்கு கொண்டவர். அவர் தனியார் கல்வி நிறுவனங்களில் எப்படிக் கட்டுப்பாடு பேணப்பட வேண்டுமென விரும்பினாரோ அதேபோல தனது கல்லூரி மாணவர்களும் கட்டுப்பாட்டுடன் கல்வி பயிலவேண்டுமென விரும்புபவர். இதன் காரணமாகத்தான் அவர் பணியாற்றும் யாழ் மத்திய கல்லூரியில் மாணவர் ஒழுக்கம் பேணுவதற்கு பொறுப்பாசிரியராக இருந்ததுடன் மாணவர் ஒழுக்கத்தைப் பேணுவதில் வெற்றியும் கண்டவர். மாணவர் நல்லொழுக்கமே கல்விக்கு அடிப்படை என்பதை நன்குணர்ந்து செயற்பட்டவர் என்று கூறினால் அது மிகையாகாது.

மாணவர் நலனில் அக்கறை கொண்ட திரு வரதராஜன் என்றுமே சுறுசுறுப்பாக இயங்கும் தன்மை கொண்டவர். அவர் தனியார் கல்வி நிலையத்தினூடாகவும், யாழ் மத்திய கல்லூரி'யூடாகவும் மாணவர்களுக்கு சேவை ஆற்றியது மட்டுமன்றி கோப்பாய் 'லயன்ஸ்' கழகத்தினூடாக பொதுமக்களுக்கு சேவையாற்றும் பண்பாளராக பணியாற்றி வருவதையும் கவனத்திலெடுத்தல் வேண்டும். எத்தகைய தீர்மானத்தை எடுப்பதிலும் அதனை நடைமுறைப் படுத்துவதிலும் அவருக்கென தனியான ஆளுமையும் ஆற்றலும் இருப்பதனை நாம் ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும். அவரது இக் கல்வியுலக சேவையானது எக்காலத்திலும் தொடரவேண்டுமென வாழ்த்துவதுடன், அவர் தனது மனைவியுடனும் மகளுடனும் மகிழ்வாக வாழ்ந்து மணிவிழா, வைரவிழா, நூற்றாண்டுவிழா என்பவற் றினைக் காணவேண்டுமென எல்லாம் வல்ல இறைவனை வேண்டி எனது வாழ்த்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.



புலம்பெயர்ந்து வாழும்
பழைய மாணவர்கள் சார்பில்
திரு.R.ஜெயகாந்தன்
ஜேர்மனி

## சேவைக்கு தேவை பொன்விழா

தாயகத்தில் தன்னலமற்ற சேவையில் அகவை ஐம்பதை பூர்த்தி செய்யும் எமது வரதன் ஆசிரியரின் பொன் விழாவை முன்னெடுக்கும் பொன்விழாக் குழுவினருக்கு எம் மனப்பூர்வமான நன்றியைத் தெரிப்பதுடன் இவ் விழா சிறக்கவும் இவ் விழாவினூடு எம் ஆசான் மேலும் பல்லாண்டு சிறப்புடன் வாழும் ஒரு மன உறுதியை எல்லாம் வல்ல கற்பக விநாயகர் வழங்க வேண்டுமென வேண்டியும் இவ் விழாக் குழுவினருக்கு ஆதரவாக புலம் பெயர்ந்த பழைய மாணவர்கள் ஆகிய நாம் ஒன்று சேர்ந்து பொன் விழா நிதியாக ஐம்பதாயிரம் ரூபாவை (50000/=) மனப்பூர்வமாக அனுப்பி வைக்கின்றோம்

# மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரத்தையே அரசு - புலிகள் எமக்கு வழங்கியுள்ளனர்

## கண்காணிப்புக் குழுப் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கமும் தமிழீழ விடுதலைப்புலிகளும் எமக்கு வழங்கியுளள அதிகாரம் மட்டுப்படுத்தபபட்ட நிலையிலேயே உள்ளது. யுத்த நிறுத்தத்தைப் பயன்படுத்தி யுத்தநிறுத்த மீறல்களைப் புரிவோருக்குத் தண்டனை வழங்கும் அதிகாரம் எம்மிடம் இல்லை என யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

ஊடகமொன்றுக்கு வழங்கிய விசேட செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

யுத்த நிறுத்தக் கண்காணிபபுக் குழுதான் சமாதானப் பேச்சு வார்த்தைக்கு அரசையும் விடுதலைபபுலிகளையும் கொண்டு வராமல் செயற்படுகின்றது என ஊடகங்களும் அரசியல் கட்சிகளும் குறிப்பாக ஜே.வி.பியும் தெரிவித்து வருகின்றன.

எமக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தைத் தவிர எம்மால அதனை மீறிச் செயற்பட முடியாது. யுத்த நிறுத்தப் புரிந்துணர்வு உடன்படிக்கையின் நான்காம் ஆண்டில் நாங்கள் தற்போது நிற்கின்றோம். இதனை அடைவதற்கு அரசும் விடுதலைப் புலிகளும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டனர். இதற்கு யுத்தநிறுத்தக் கணகாணிப்புக் குழுவான நாங்களே காரணம. இரு தரப்பினருக்கும் இடையில் எவ்வளவோ சந்தர்ப்பங்களில முறுகல் நிலை தோன்றியது. அது யுத்தமாக வெடிக்ககூடிய சாத்தியக்கூறுகளும் காணப்பட்டன. ஆனால் அந்த நிலையைக் கட்டுப்படுத்தி வெற்றி சுமுகமாக நடைபோட வைத்தது நாங்கள் தான்.

இவ் வாறானதொரு சூழ் நிலையில் எங்கள் மீது குற்றம் சுமத்துவது எந்தவிதத்திலும் பொருத்தமாகாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(ந-4)

# ஆசிரியர்கள் அர்ப்பணிப்புடன் பணியாற்ற வேண்டியது அவசியம்

## பரு. ப.நோ.கூ.சங்கத் தலைவர் உரை

பருத்தித்துறை சித்தி விநாயகர் வத்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி கடந்த 20.02.2005 இல் ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் அதிபர் இ.நாகேந்திரராசா தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு இளைப்பாறிய மக்கள் வங்கி முகாமையாளரும் பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவருமான வி.கே. ஏகாம்பரமூர்த்தி பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு மங்கள விளக்கை ஏற்றி போட்டிகளை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையில்,

மாணவர்கள் சிறுவயது முதல் பெற்றோரின் கால்களைத் தொட்டு வணங்குவதுடன் எழுத்தறிவித்த இறைவனான ஆசிரியர்களையும் கைகூப்பி வணங்குங்கள்.

முதியோரிடம் அன்பு செலுத்துங்கள். இளையவர்களுடனும் அனுசரித்து நடவுங்கள். அன்பால எதையும சாதித்துக் கொள்ள முடியும் என்பதைப புரிந்துகொள்ளுங்கள்.

மாணவர்கள் சமூகத்தை மேம்படுதத அயராது உழைக்க வேண்டும்.நல்ல நூல்களையும், பத்திரிகைகளையும் வாசிக்கும் பழக்கத்தை விருத்தி செய்யுங்கள். வதி ஒழுங்குகளைக் கடைப்பிடித்து விபத்துக்கள் ஏற்படுவதைத் தடுக்க உதவுங்கள். சாதி, மத பேதம் காட்டாது சகலருடனும் இணைந்து வாழுங்கள்.

விளையாட்டுப் போட்டிகள் உங்கள் உடல்நலனைப் பேணுவதுடன வெற்றி,தோல்வி இரண்டையும சமமாகக் கொள்ளும் பக்குவத்தை உங்களுக்குக் கற்பிக்கின்றது.

கல்வியாலும், ஒழுக்கத்தாலும் உஙகள் பாடசாலைக்குப் பெருமையைத் தேடிக்கொடுங்கள் என்று கேட்டார்.

அத்துடன், ஆசிரியர்கள் பணி மகிமை மிக்கது. இந்த நாட்டையே கட்டியெழுப்பும் சிற்பிகளை உருவாக்கும் உன்னத பணி அது. கிடைத்தற்கரிய இவ் அரிய சந்தர்ப்பத்தை அர்ப்பணிப்புடன் ஏற்று மாணவர்களின் வாழ்க்கையையும உங்களின வாழ்க்கையையும் மேம்படுத்துங்கள் எனக் கூறினார்.

(ப-104)

# சிநேகபூர்வ கிரிக்கெற் போட்டி

## மகாஜனாக் கல்லூரி வெற்றி

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி அணிக்கும், தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி அணிக்குமிடையே நடைபெற்ற சிநேகபூர்வ கிரிக்கெற் போட்டியில் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி 6 விக்கெறறுக்களால் வெற்றிபெற்றது.

கடந்த 18,19ஆம் திகதிகளில் மகாஜனாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இபபோட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணக் கல்லூரி அணி தனது முதல் இன்னிங்ஸில் சகல விக்கெற்றுக்களையும் இழந்து 18ஓட்டங்களைப்பெற்றது.

பெரியதம்பி 37,சசிதரன் 34 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ரஜீவ் 5 விக்கெற்றுக்களையும் அல்மிக்ஸன் 3 விக்கெறறுக்களையும் வீழ்த்தினர்.

மகாஜனாக்கல்லூரி அணி தனது முதல் இன்னிங்ஸில் 9 விக்கெற்றுக்களை இழந்து 223 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது.

ஒரு நிலையில் 6 விக்கெற்றுககளை இழந்து 64 ஓட்டங்களை மாத்திரமே பெற்று இக்கட்டான நிலையிலிருந்து அவ் அணியை ரவிசாந்தும் தர்ஷனும் சிறப்பாக ஆடி ஸ்திரமான நிலைக்குக் கொண்டு வந்தனர்.

ரவிசாந் 113 ஓட்டங்களையும் தர்ஷன் 32 ஓட்டங்களையும் எடுத்தனர். பந்து வீச்சில் ஜனார்ததனன, தனாகரன் ஆகியோர் தலா 4 விக்கெற்றுக்களை வீழ்த்தினா.

யாழ்ப்பாணக் கல்லூரி தனது இரண்டாவது இன்னிங்ஸில் 155 ஓடடங்களை மாத்திரம் பெற்று சகல விக்கெற்றுக்களையும இழந்தது பெரியதம்பி நிருபரன, தனாகரன் ஆகியோர் தலா 23 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் தனஞ்சயன் 4 விககெறறுக்களை வீழ்த்தினார்.

113 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் தனது இரண்டாவது இன்னிங்சை விளையாடிய மகாஜனாக் கல்லூரி 4 விக்கெற்றுக்களை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

ரவிசாந்-23, ஜெயப்பிரியன்-24 ஓட்டங்களைப் பெற்றனர். சிவபபரகாசம் 3 விக்கெற்றுககளை வீழ்த்தினார். இதன்மூலம் மகாஜனாக்கல்லூரி 6 விக்கெறறுக்களால் வெற்றிபெற்றது.

(ந-7,39)

# விளையாட்டு செய்திகள்

# சிம்பாப்வே 131 ஓட்டங்களால் தோல்வி

## தொடரை வென்றது தென் ஆபிரிக்கா

தென் ஆபிரிக்கா சிம்பாப்வே அணிகளுக்கிடையிலான இரண்டாவது ஒருநாள் போட்டியிலும் தென்ஆபிரிக்க அணி 131 ஓட்டங்களால் வெற்றி பெற்



றுள்ளது.

இதன்மூலம் 3 போட்டிகள் கொண்ட இந்த ஒருநாள் தொடரில் 2:0 என்ற முன்னிலையில் அது தொடரையும் கைப்பற்றியுள்ளது.

நேற்று முன்தினம் தென் ஆபிரிக்காவின் டர்பன் நகரில் நடைபெற்ற இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சிம்பாப்வே அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபட விரும்பி தென ஆபிரிக்க அணியைத் துடுப்பெடுததாட அழைத்தது.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக தென் ஆபிரிக்க அணித் தலைவா ஸ்மித்தும் மார்க்புச்சரும் களம் இறங்கினர். ஸ்மித அபாரமாக ஆடி ஒரு சதத்தைப் பூர்த்தி செய்து 117 ஓட்டங்களை எடுத்தார்.இவரது இந்த ஓட்ட எண்ணிக்கையில் 4 சிக்சர்களும் 6 பவுண்டரிகளும அடங்கும்.

கிப்ஸ் -75 ஓட்டங்களை எடுத்தார். மார்க்புச்சர்-18,பிரின்ஸ் -30 ஓட்டங்கள் இறுதிக்கட்டத்தில கெம்ப் அதிரடியாக ஆடி 19 பந்துகளில் அரைச் சதத்தை பூர்த்தி செய்து 53 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்காது இருந்தார்.

இவரது ஓட்ட எண்ணிக்கையில் 5 சிக்சர்களும் 2 பவுண்டரிகளும் அடங்கும். உதிரிகளாக 24 ஓட்டங்கள் பெறப்பட்டன.

தென்னாபிரிக்க அணி தனது 50 ஓவர்களில் 6விக்கெற்றுக்களை இழந்து 329 ஓட்டங்களை எடுத்தது. பந்து வீச்சில் மவ்பு 3 விக்கெற்றுக்களையும், ரோஜர் 2விக்கெற்றுக்களையும் மஸகட்சா 1 விக்கெற்றையும வீழ்த்தினர்.




பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே அணி தனது 50 ஓவர்களில் 7 விக்கெற்றுக்களை இழந்து 198 ஓட்டங்களை மாத்திரமே எடுத்ததால் 131 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

சிமபாபவே அணி சார்பில் ரோஜர் ஆகககூடுதலாக 47 ஓட்டங்களை எடுத்தார். மக்ஸிக் கென்ஜேரி -16, மஸகட்சா -20,மகிர்க்வெட்-13, ரெயிலர்-23,தைபு-16, வில்லியம்ஸ் ஆட்டமிழக்காது-33, ஈவிங்-12 ஓட்டங்களை எடுத்தனர். உதிரிகளாக 14 ஓட்டங்கள் பெறப்பட்டன.

பந்துவீச்சில் மோர்ஹேல், நிக்சி போயே, பாச்சர் ஆகியோர் தலா 2 விக்கெற்றுக்களையும்



ஹோல் ஒரு விக்கெற்றையும் வீழ்த்தினர்.

இபபோட்டியில் ஷேன் பொலக், நிற்றனி ஆகியோர் ஓய்வு பெறும் நோக்கில் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.(ந-7)

# மரியஷரபோவா சம்பியனானார்

கட்டார் ஓபன் டென்னிஸ் தொடரில் ரஷ்ய வீராங்கனை



மரிய ஷரபோவா சம்பியன் பட்டத்தை வென்றுள்ளார்.

கட்டாரின் தலைநகர் டோஹாவில் நடைபெற்ற முன்னணி டெனிஸ் வீராங்கனைகள பலர் பங்குபற்றிய இப்போட்டியில் விறுவிறுப்பான இறுதிப் போட்டிக்கு 17 வயதான ஷரபோவாவும் அவுஸ்திரேலிய வீராங்கனை அலிசியா மோலிக்கும் தகுதி பெற்றிருந்தனர்.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இறுதிப்போட்டியில் ஷரபோவா 4:6 ,6:1,6:4 என்ற செறகணக்கில் மோலிக்கை வீழ்த்தி வெற்றிபெற்றாா. மாதததில் ஷரபோவா வென்ற இரண்டாவது பட்டம் இதுவாகும்.

சவாலாக தனக்கு இப்போட்டி அமைந்ததாகக் கூறிய ஷரபோவா மோலிக் திறமையாக விளையாடியதாகவும் அவரை வெல்வது கடினமாக இருந்ததாகவும் கூறினார்.

ஷரபோவாவுக்குப் பரிசாகத் தங்கத்திலான அழகிய கலைமான உருவம் பதிக்கப்பட்ட வெற்றிக் கிண்ணமும் பெருந்தொகைப் பணமும் வழங்கப்பட்டது.

(ந-7)

# துபாய் ஓபன் டெனிஸ்

## இறுதிக்கு பெடரர் தகுதி

துபாய் ஓபன் டெனிஸ் சுற்றுத் தொடரின் இறுதிப் போட்டிககு சுவிஸ் வீரர் ரோஜா பெரடர் தகுதி பெற்றுள்ளார்.



கடந்த சனிக்கிழமை நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில் ரோஜர் பெரடர் ஆந்ரே அகாசியை எதிர்த்து விளையாடினார்.

ரசிகர்களிடையே பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருந்த இப் போட்டி எதிர்பாராதவாறு 52 நிமிடங்களிலேயே முடிவடைந்தது.

பெடரர் 6:3,6:1 என்ற இலகுவான செற்கணக்கில் அகாசியை வீழ்த்தி இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றார்.

இவ்வருடம் பெடரர் தான் விளையாடிய 20 போட்டிகளில் 19இல் வெற்றி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.


மற்றொரு அரையிறுதிப் போட்டியில் வெற்றி பெற்ற குரோஷிய வீரர் இவான் ஜுபசிக் பெடரருடன் இறுதிப் போட்டியில் மோதவுள்ளார்.

2003ஆம் ஆண்டிற்குப் பின்னர் ரோஜர் பெடரர் பங்குபற்றிய எந்த இறுதிப் போட்டியிலும் தோல்வியடையவில்லை.

இதேவேளை,இப்போட்டியில் நீண்ட இடைவெளிக்குப் பின் பங்குபற்றிய ஆந்ரே அகாசி வெற்றி பெறுவார் என எதிர்பார்க்கப்பட்ட போதும் அவர் தோல்வியடைந்தமை குறிப்பிடத்தக்கது.

(ந-7)

# கொழுப்பைக் கரைக்கும் அப்பிள்



அப்பிள் சாப்பிட்டால் டாக்டரிடம் போக வேண்டாம் என்று சொல்வதுண்டு. காரணம் அதில் இருக்கும் விஷயங்கள் அப்படி.

விற்றமின் சி.பீட்டா கரோடீன், பொட்டாசியம் மற்றும் ஃபோலிக் அமிலமும் இருக்கின்றன. பெக்டின் (pectin) என்ற எளிதில் கரையும் நார்ச்சத்தும் இருப்பதால், ரத்தத்தில் கொழுப்பு சேராது. இருந்தாலும் கரைக்கும். இவை தவிர தாவரங்களில் இருக்கும் சில வகை இரசாயனப் பொருட்களும், plyphenlos உம் இருக்கின்றன. கான்சரைத் தடுப்பதில் இதற்கு முக்கிய பங்குண்டு.

கொழுப்பு இல்லாத கலோரிச் சத்து மிக்க அப்பிளைத் தோலோடு சாப்பிட்டால், நோய் அணுகாது. அதுவும் வெயில் காலத்தில் அப்பிள் சாப்பிடுவது மிகவும் நல்லது.

# பிளேன்டீ அருந்துங்கள்



பால் கலக்காத தேநீரை தினமும் 6 கோப்பை குடித்தால் அது இரத்தக்குழாய் அடைப்பை அகற்றிவிடும் என்று அமரிக்காவிலுள்ள பொஸ்டன் பல்கலைக்கழக பேராசிரியர் டாக்டர் ஜோசப் ஏவிட்டா கூறியுள்ளார்.

தேநீரில் போலிக்கமிலம், மாங்கனீஸ் விற்றமின் பி.காம்ப்ளக்ஸ் ஆகியவை அடங்கி உள்ளன. தேநீரில் உள்ள பிளேவனாய்ட் என்ற பொருள் 22 பழங்களிலும் காய் - கறிகளிலும் உள்ளதை விட அதிகம் ஆனது ஆகும்.

பிளேவனாய்ட் சக்தியை உணவு மூலம் உட்கொள்ளும்போது இருதயம் செயலாக்கம் பெறுகிறது.

மாரடைப்பு ஏற்படுவதற்கான வாய்ப்புகள் குறைகிறது. தினம் 4 கோப்பை தேநீர் குடித்தால், மாரடைப்பால் ஏற்படும் மரணம் 68 சதவீதம் குறைகிறது. ஒரு கோப்பை தேநீரில் இருந்து 4 கலோரி சக்தி கிடைக்கிறது. மேலும் தேநீரில் உள்ள டொனிக அமிலமும், புளோரைடும், பற்களுக்கும், ஈறுகளுக்கும் நல்லது.

97 சதவீத பல் டாக்டர்கள் தேநீர் நல்ல ஆரோக்கியமான பானம் என்று நம்புகிறார்கள்.

# சுவாசம் எப்படி ஆரம்பிக்கின்றது?

ஒரு குழந்தை தன் தாயின் கர்ப்பப்பைக்குள் இருக்கும் வரைக்கும் மூச்சு விடவேண்டிய அவசியமே இல்லை. என்ன காரணம் தெரியுமா?

அக்குழந்தை தன் தாயின் உதிரத்துடன் தொப்புள் கொடி மூலம் பெறுகின்ற ஒட்சிசனைத் தொப்புள் கொடி இரத்தம் மூலமாகப் பெற்றுக்கொள்கின்றது.

அக்குழந்தை தன் தாயின் கருவறையை விட்டு வெளியே வந்ததும் வாய்திறந்து கத்தி அழும்போதுதான் குழந்தைக்கு முதல் சுவாசம் ஏற்படுகிறது. அப்படி குழந்தை அழாமலிருந்தால் வைத்தியர்கள் அல்லது தாதிமார் குழந்தையை சுண்டி அழ வைப்பார்கள். அதன் பின்னரே குழந்தையின் நுரையீரல்கள் விரிந்து உள்வெளிச் சுவாசம் ஆரம்பமாகிறது.

# நகைச்சுவை

அச்சம், கவலை, துயரம், ஆகியவை நம் உள்ளத்தின் சக்திகளை உறிஞ்சிவிடக் கூடியவை.

அதேபோல மகிழ்ச்சி, அன்பு, கனிவு, நம்பிக்கை, பிறருக்கு உதவி செய்யும் பணிவு, இனிமையான இயல்பு இவை செயலாம் வலுவற்ற மனதிற்கும் வலுவளிக்கும் அருமருந்துகள்.

இந்தக் குணங்களை நாம் பாடுபட்டு வளர்த்துக்கொள்ள வேண்டும். அப்படி வளர்த்துக் கொள்ளும் அளவுக்கு நாம் சக்த படைத்தவர்களாய் விளங்கலாம்.

எல்லாவற்றைக் காட்டிலும் நம் உள்ளத்திற்கு ஆற்றலை ஊட்டக்கூடியது நகைச்சுவை.


நகைச்சுவை என்பது பிறர் நகைச்சுவையாகப் பேசுவதைக் கேட்டு நாம் சும்மா சிரித்து விட்டுப் போவதன்றோ அல்லது பிறரை நாம் எந்த நேரமும் கேலி பண்ணிக் கொண்டிருப்பதென்றோ கருத்தல்ல.



பிறரை நாம் கேலி பண்ணலாம். ஆனால் அது அவர் உள்ளத்தைப் புண்படுத்துவதாக இருக்கக்கூடாது. பிறரைப் புண்படுத்தும் குத்தலான பேச்சுக்கள் நகைச்சுவையாக மாட்டாது. அப்படிப் பேசுவதைத் தங்கள் திறமையின் அறிகுறி என்று சிலர் எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். இது ஒரு தவறான எண்ணம்.

அப்படியென்றால் நகைச்சுவை என்று குறிப்பிடுவது எதை? பிறருடைய குறைபாடுகளையும், பல வனங்களையும், அசட்டுத்தனங்களையும் நாம் எவ்வாறு எள்ளி நகையாடுகிறோமோ அவ்வாறே நம்முடைய குறைபாடுகளையும் நாம் எள்ளி நகையாடிக் கொள்வதுதான் உண்மையான நகைசசுவை.

# மருத்துவக் குறிப்புகள்



* பல்வலி கடுமையாக இருப்பின் கொய்யா இலையை நன்குமென்று வாய் கொப்பிளிக்க பல்வலியின் கடுமை குறையும்.

* வெய்யில் காலங்களில் பலரும் வாய்ப்புண்ணால் அவதியுறுவர். இதற்கு மணித்தக்காளி இலையைச் சமைத்துச் சாப்பிட்டால் குணமடையலாம்.

* மிகச் சிறந்ததொரு கிருமிநாசினிதான் மஞ்சள். இதனுடன் வேப்பிலையை அரைத்துப் பூச சொறி, சிரங்கு, அம்மைத்தழும்புகள் ஆறும்.

* தினமும் சூடான பாலில் ஒரு சிட்டிகை மஞ்சள் கலந்து சாப்பிட்டால் உடலுக்கு நல்ல ஆரோக்கியம் கிடைக்கும்.

தலைவலி, ஜலதோஷம், நீர் தொடர்பான வியாதிகள் நீங்கும்.

* தினமும் கரட்சாறு அருந்தி வந்தால் மஞ்சள் காமாளை நோயாளிகள் விரைவில் குணமடைவர்.

* வயிற்றுவலிக்கு வெந்தயத்தை அரைத்து நீரில் கலந்து குடிக்க குணமாகும்.

* காலில் சேற்றுப்புண் ஏற்பட்டால் உளுந்தை அரைத்து எலுமிச்சம்பழச்சாற்றுடன் கலந்து புண்ணுள்ள விரல்களில் தடவ புண் ஆறிவிடும்.

* தினமும் வெள்ளைப் பூண்டை உணவில் சேர்த்துவர ஊளைச்சதை குறையும். மேலும் கொலஸ்ரோலைக் கட்டுப்படுத்தவும் வெள்ளைப் பூண்டு உதவுகிறது.

* வெற்றிலைக் கொழுந்தில் சுண்ணாம்பு வைத்து இரண்டையும் சேர்த்தரைத்து நகச்சுற்றின் மேல் வைத்துக் கட்டிவர நகச்சுற்று குணமாகும்.

# இவரைத் தெரியுமா? பரிசுப்போட்டி இல. 50

## படத்தில் இருப்பவர் யார் தெரியுமா?



புகழ்பெற்ற பெரியார்களில் ஒருவரான இவர், மேடைப் பேச்சில் சிறந்தவரெனப் போற்றப்பட்ட அறிஞர், இவரை உங்களுக்குத் தெரிந்தால் உங்கள் விடைகளை எழுதி எதிர்வரும் 07 ஆம் திகதிக்கு முன்ன் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவும்.

நீங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

**இவரைத் தெரியுமா?**
**போட்டி இல:- 50**
**வலம்புரி ~ சங்குநாதம்**
**இல:- 15, வெள்ளாந்தெரு,**
**வண்ணார்பண்ணை,**
**யாழ்ப்பாணம்.**

**குறிப்பு:-**

சரியான விடை எழுதுபவர்களில் மூன்று போட்டியாளர்களுக்கு குலுக்கல்முறை மூலம் தெரிவுசெய்யப்பட்டு பரிசு வழங்கப்படும்.

பரிசுபெறும் அதிஷ்டசாலிகள் தமக்கான பரிசுப்பணத்தினை 'வலம்புரி' காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளவும்.

### இவரைத் தெரியுமா? பரிசுப் போட்டி இல:-50

| | |
|---|---|
| படத்தில் உள்ளவரின் பெயர் | :-........................ |
| அனுப்புபவரின் முழுப்பெயர் | :-........................ |
| அனுப்புபவரின் முகவரி | :-........................ |
| | ........................ |
| | ........................ |

### இவரைத்தெரியுமா? பரிசுப்போட்டி இல - 48 சரியான விடை





நடிகர் பிரபு

### இவரைத் தெரியுமா பரிசுப்போட்டி இல. 48இல் பங்குபற்றிப் பரிசுபெறும் அதிஷ்டசாலிகளின் பெயர் விபரம்

| | |
|---|---|
| முதற் பரிசு | :~த.தனஞ்சயன்,<br>பொன்னாலை வீதி,<br>சங்கானை. |
| இரண்டாம் பரிசு | :~த.வக்சலா,<br>கண்டிறோட்,<br>சாவகச்சேரி. |
| மூன்றாம் பரிசு | :~V.லிடியா,<br>2ஆம் கட்டை இராசவீதி,<br>கோப்பாய் மத்தி,<br>கோப்பாய். |

### சரியான விடை எழுதிப் பாராட்டுப் பெறுவோர் பெயர் விபரம்

க.கபிலன், நீர்வேலி. வி.மகேந்திரராஜா, மானிப்பாய். திருமதி.யோ. ஜெகதீஸ்வரி, சாவகச்சேரி. பி.ஜெயராணி, யாழ்ப்பாணம். ப.பிரதீபன், யாழ்ப்பாணம். வே.சுபாஷினி, கட்டுடை. இ.கோவிந்தராஜன், நல்லூர். திருமதி. S.பாக்கியநாதன், வட்டுக்கோட்டை. வே.மாலினி, சுன்னாகம். க.றுதீஸ், அரியாலை. சூ.யோ.மரியடாசன், அளவெட்டி. சி.துவாரகா, வதிரி. சி.விவேக், வியாபாரிமூலை. இ.வசந்தினி, ஏழாலை. பா.தவமணி, பருத்தித்துறை. மு.சஞ்சீவன், மானிப்பாய். வே.குமாரசுவாமி, கரவெட்டி. சி.ஜெயருக்ஷன், சுன்னாகம். செ.பங்குஷா, நீர்வேலி. ஏ.வாசவி, அரியாலை. லோ.பபிதா, பண்டத்தரிப்பு. S.சத்தியநாயகி, கோண்டாவில். T.தர்ஷினி, தம்பசிட்டி. கே.இராஜகோபால், வட்டுக்கோட்டை. சு.மதுசன், சுழிபுரம். லோ.அபிராமி, வல்வெட்டித்துறை. V.இளங்கோ, கோப்பாய். அ.அனித்தா, வடலியூர். க.கதிர்காமத்தம்பி கரவெட்டி. சு.விதுஷன், உடுப்பிட்டி. க.மங்கையக்கரசி, சாவகச்சேரி. த.கல்பனா, உடுப்பிட்டி. ந.மயில்வாகனம், அராலி. க.கந்தையா, மந்துவில். த.திவ்வியன், அச்சுவேலி. க.மனோகரன் நாவற்குழி. த.பவித்திரா, உடுவில். க.கௌசல்யன், காரைநகர். தே.வினோதரன், வேலணை.

# உட்கட்சி முரண்பாடுகளுக்கு பேச்சுவார்த்தை மூலமே தீர்வு

## கூட்டமைப்புத் தீர்மானம்

(கொழும்பு)

அரசாங்கத்தில் நிலவும் முரண்பாடுகளுக்குப் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வு காணப்படவேண்டுமென ஆளும் ஐக்கிய மக்கள சுதந்திரக் கூட்டமைப்புககுள தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

இந்த வகையில், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்குள் ஏறபட்டுள்ள பிரதான முரணபாடுகளுக்குத் தீர்வுகாணும் விசேட சந்திப்பொனறு நேறறுமுன்தினம் இடம்பெற்றது.

அரசாஙகத தரப்பில் அமைச்சர்கள் மங்கள சமரவீர, சுசில் பிரேமஜெயந்த, தினேஷ் குணவர்த்தன ஆகியோரும் மக்கள் விடுதலை முன்னணியின் சார்பில் விமல் வீரவன்சவும் இதில் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பில் அரசில் அஙகமவகிக்கும் கட்சிகளை அங்கீகரித்துச் செல்லவேண்டும் எனவும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

எனினும், இந்தச் சந்திப்புக் குறித்துக் கருத்துத் தெரிவித்த ஜே.வி.பியின் முககியஸ்தர் ஒருவர்,

உத்தியோகபூர்வமான சந்திப்பாக இதனைக கருதாவிட்டாலும், வழமையாக நடைபெறும் சந்திப்புக்களில் ஒன்றாகவே இதனைக் கருதமுடியும் என்றார். (ற-9)

# மேஜர் தயானந்தனின் வித்துடல் விதைப்பு

(மருதங்கேணி)

சுகவீனம் காரணமாகக் கடந்த 25ஆம் திகதியனறு வீரச்சாவைத் தழுவிக்கொண்ட மேஜர் தயானந்தனின் (சின்னராசா - தங்கவடிவேல்) வித்துடல் நேற்று முன்தினம் பொலிகண்டி எள்ளங்குளம் மாவீரர் துயிலுமில்லப் புனித விதைக்குழியில் விதைக்கப்பட்டது.

மேஜர் தயாளுந்தாவின் வீட்டிலிருந்து வித்துடல் பாண்ட் வாத்திய இசை அணிவகுப்பு மரியாதையுடன் வல்வை மகளிர் கல்லூரி மண்டபத்தல் அஞ்சலிக்காக் வைக்கப்பட்டது.

அங்கு தமிழீழ மாவீரர் பணிமனைத் துணைப்பொறுப்பாளர் இனியவன் தலைமையில் வீர வணக்கக் கூட்டம் இடம்பெற்றது. பொதுச்சுடர், ஈகசசுடர் ஏற்றல்களைத் தொடர்ந்து, வல்வை விளையாட்டுக்கழகத் தலைவா, கடற்றொழிலாளர் சங்கத் தலைவர் குட்டித்தம்பி, கடற்புலிகளின் ம்களிர் அரசியல்துறைப்பொறுபபளர், கடற்புலிகளின் தளபதி வினாயகம் ஆகியோா அஞ்சலி உரை நிகழ்த்தினர்.

தொடர்ந்து கடற்புலிகளின் நிதிப் பொறுப்பாளர் மேஜர் தயானந்தனின் வித்துடல் எடுத்துவரப்பட்டு மதியம் 12.30 மணியளவில எள்ளங்குளம் மாவீரர் துயிலுமிலலத்தில் பூரணமரியாதையுடன் புனித விதைகுழியில் விதைககப்பட்டது. (ச-113,35)

# அழகெழல் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசியக் கல்வியியற் கல்லூரியின் நுண்கலை மன்றத்தால் பாடசாலை மாணவர்களிடையே வருடாந்தம் நடாத்தப்படும் அழகெழல் போட்டிகள் இவ்வருடமும் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 25, 26ஆம் திகதிகளில் இவ் அழகெழல் போட்டிகள் நடைபெறவுள்ளன.

இலங்கை வங்கியின் அனுசரணையுடன், ஓவியம், சிற்பம், இசை, நடனம் மற்றும் நாடகம் ஆகிய துறைகளில் இப்போட்டிகள் நடைபெறவுள்ளன.

வலய மட்டத்தில் முதலாமிடம் பெறும் குழு நிலைப் போட்டிகளுக்குச் சான்றிதழ்களும் 'அழகெழல்' கேடயமும் வழங்கப்படவுள்ளது.

25ஆம் திகதி சித்திரம், நாடகம் ஆகியவற்றுக்கான போட்டிகளும் 26ஆம் திகதி இசை நடனம் ஆகிய போட்டிகளும் யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

போட்டிக்கான விண்ணப்பங்கள் அதிபான உறுதியுரையுடன் எதிர்வரும் 19ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கப்படல்வேண்டும்.

குழுப்போட்டிகளில் முதல் மூன்று இடங்களையும் பெறுவோருக்கு முறையே, 2ஆயிரம் ரூபா, ஆயிரத்து 500 ரூபா, ஆயிரம் ரூபா பரிசாக வழங்கப்படவுள்ளது.

தனிப்போட்டிகளில் முதலாம் இடத்தற்கு ஆயிரம் ரூபாவும் இரண்டாம் இடத்திற்கு எழுநூற்று ஐம்பது ரூபாவும் மூன்றாம் இடத்திற்கு ஐந்நூறு ரூபாவும் வழங்கப்படவுள்ளது.

அத்துடன், சான்றிதழ்களும் முதலாமிடம் பெறுவபவர்களுக்குச் சிறப்புக் கேடயமும் வழங்கப்படவுள்ளது.

அனைத்துப் போட்டிகளுக்கான விண்ணப்பங்களும் 'இணைப்பாளர், நுண்கலைத்துறை, யாழ்ப்பாணம் தேசிய கலவிய்யற் கல்லூரி கோப்பாய்' என்ற முகவரிக்கு மாா்ச் 19ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கப்படவேண்டும். (ற-7)

## புனித பீற்றர் தேவாலயத்தில்

# பாப்பரசருக்குப் பதிலாக உதவியாளர் பிரார்த்தனை

(ரோம்)

ரோம் நகரில் அறுவைச் சிகிச்சைக்குப்பிறகு உடல்நிலை தேறிவரும் புனித பாப்பரசர், தான் தங்கியிருக்கும் மருத்துவமனையின் ஜன்னல் வழியாக எவரும் எதிர்பார்க்காத வகையில் நேற்றுமுன்தினம் தோன்றினார்.

பாரம்பரிய வெள்ளை உடையில் பலவீனமாகக் காட்சியளித்த பாப்பரசர் கையினால் சிலுவை போன்று சைகைகாட்டினார்.

அத்துடன் தனது நலன் விரும்பிகளை நோக்கி அவர் கை அசைக்கவே அவர்களும் அதனை ஏற்றுப்பதிலுக்குக் கையசைத்தனர்..

சுவாசச் சிக்களைத் தர்ப்பதற்காக வைத்தியர்களால் அறுவைச் சிகிச்சைமூலம் குழாய் பொருத்தப்பட்ட தனது தொண்டையையும் அவர் சுட்டிக்காட்டினார்.

புனித பீற்றர் தேவாலயத்தில் வழமையான ஞாயிறுதின ஆசீர்வாதம் வழங்கும் நிகழ்வில் முதல் தடவையாக அவர் கலந்து கொள்ளத் தவறியிருக்கின்றார். ஆனால், அங்கு கூடிய ஆயிரக் கணக்கான யாத்திரிகர்கள் முன்பாக அவரது உதவியாளரால் செய்தி அங்கு படிக்கப்பட்டது.

"வாழ்வின் துன்பநிலையை அனுபவிப்பவர்கள் மற்றும் அவதியுறுவோர் அனைவருக்கும் நல்ல சுகமும், நல்ல எதிர்காலமும் கிடைக்கவேண்டும் என்றுதான் வேண்டுவதாக அவர் அந்தச் செய்தியில் குறிப்பிட்டிருந்தார்.

வழக்கமாக ஞாயிற்றுக்கிழமை பாப்பரசர் பட்டாஸ் தேவாலயத்தில் சிறப்புப் பிரார்த்தனை நடத்தி பொதுமக்களுக்கு ஆசி வழங்குவது வழக்கம். ஆனால் அவர் இப்போது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருவதால் அவருக்குப் பதில் லியானார் டேசாண்ட்ரி பட்டாஸ் தேவாலத்யதில் சிறப்புப் பிரார்த்தனை நடத்த அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக பாப்பரசர் வைத்தியசாலையில் அறையில் இருந்தபடி ஞாயிற்றுக்கிழமை பிரார்த்தனை நடத்தவும் ஆசி வழங்கவும் அதை வீடியோ மூலம் ஒளிபரப்பவும் ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால் அந்தத் திட்டம் கைவிடப்பட்டுள்ளதாகவும் வத்திக்கான் நிர்வாகம் அறிவித்துள்ளது. (ற-04)

# கூட்டம்

(பொன்னாலை)

கோப்பாய் மக்கள் நலன் காக்கும் சங்கத்தின் பொதுக் கூட்டமும், புதிய நிர்வாகச் சபைத் தெரிவும் எதிர்வரும் 24 ஆம் திகதி வியாழக்கிழமை கோப்பாய் உதவிப் பிரதேச செயலர் அ.சாந்தசீலன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ப-49)

# சிகை ஒப்பனை நிலையங்கள் நாளை பூட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் நாளை புதன் கிழமை மாபெரும் கண்டனப் பேரணி நடைபெறவுள்ளதால் யாழ். மாவட்ட சிகை ஒப்பனையாளர்கள் கடைகளை மூடி இப் பேரணியில் கலந்துகொள்ளுமாறு யாழ்.மாவட்டச் சிகை ஒப்பனையாளர் சங்க நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர்.


அத்துடன், யாழ்ப்பாண சிகை ஒப்பனையாளர் சஙக உறுபபினர்களை யாழ்.சிகை ஒப்பனையாளர்களின் சங்கத்திற்குக் காலை 9.00மணிக்கு ஒன்று கூடுமாறும் கேட்கப்பட்டுள்ளது. (ற)

# தேர்த்திருவிழா

(பொன்னாலை)

நயினை ஸ்ரீபத்திரகாளி சமேத வீரபத்திரர் ஆலயத்தின் தேர்த்திருவிழா எதிர்வரும் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது.

இவ்வாலயத்தில் திருவிழாக்கால நாட்களில் தினமும் மாலை 7.30 மணியளவில் வலிகாமம் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் சைவப்புலவர் கந்த சத்தியதாசன் 'பெரியபுராணம்' எனும் தலைப்பில் தொடர் சொற்பொழிவாற்றி வருகின்றார். (ப-49)





பருத்தித்துறை முனைப்பகுதி மீனவர்களுக்கு அண்மையில் கியூமெடிக்கா நிறுவனம் மீன்பிடி உபகரணங்கள்ள வழங்கியது. இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி மங்கள விளக்கேற்றுவதையும், யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் மீன்பிடி உபகரணங்களை மீனவர் ஒருவருக்கு வழங்குவதையும் படங்களில் காண்க.

படங்கள் - எஸ்.இராமச்சந்திரன்.

# பொதுமக்களுக்கு பயனளிக்கும் புதிய வேலைவாய்ப்புத் திணைக்களம்

(கொழும்பு)

பொதுமக்களுக்கு பயனளிக்கும் வகையில் வேலை வாய்ப்பு சேவைகள் திணைக்களமொன்றை தொழில் உறவுகள் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு அமைக்கவிருக்கின்றது.

இப்புதிய திணைக்களம் வேலையில் உள்ளவர்களுக்கும் வேலையற்றவர்களுக்கும் பல விதமான சேவைகளை வழங்கும்.

இத்திணைக்களத்தை அமைப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம வழங்கியுள்ளதாக தொழில் அமைச்சர் அதாவுட தெரிவித்தார்.

பதவி உயர்வுகள், மற்றும் வேலைத் தடங்கள் போன்றவற்றை கவனிப்பதுடன், வேலை ஸ்தலங்களில் சிநேகபூர்வமான சூழல் அமையவும் இத்திணைகளம நடவடிககை எடுக்கும்.

தற்போது உத்தேச திணைக்களத்தற்கான அடிப்படை சேவை அம்சங்களை தொழில் திணைக்களமும், தொழில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சும் இணைந்து தயாரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-7)

# நான்கு சிறுவர்கள் பெற்றோரிடம் ஒப்படைப்பு

(மருதங்கேணி)

வடமராட்சியில் விடுதலைப் புலிகளுடன் இணையச்சென்ற நான்கு சிறுவர்கள் அவர்களின் பெற்றோரிடம் ஒப்படைக்கப்படடனர்.

பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் வடமராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் இன்பனினால் சிறுவர்கள் ஒப்படைக்கப்பட்டனர்.

கடந்த 24ஆம் திகதி இணையச் சென்ற இரு சிறுவர்கள் 25 ஆம் திகதியும், கடந்த சனிக்கிழமையும் இணையச் சென்ற இரணடு சிறுமிகள் நேற்றுமுன்தினம் அவர்களின் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டனர். (ச-35,113)


தாய்மார்களே மறந்து விட்டீர்களா?

வெளிநாடுகளில் வசிக்கும் உங்கள் மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், நண்பர்கள், உறவினர்களுக்கு

பிறக்கப்போகும் புதுவருடத்தை முன்னிட்டு அவர்களுக்கு அனுப்பவேண்டிய உடை, உணவு, அலங்காரப் பொருட்கள் அத்துடன் கடிதங்கள், வீடியோ நாடாக்கள், அல்பங்கள் ஆகியவற்றை உலகின் எந்த நாட்டிற்கும் குறைந்த கட்டணத்தில் விரைவாக எம்மால் பொதி செய்து அனுப்பிவைக்கப்படும்.

கட்டண விபரம்

பிரான்ஸ், ஜேர்மனி, சுவிஸ், இத்தாலி, கொலண்ட் } 1KG - 750

கனடா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, லண்டன் } 1KG - 1000

தொடர்புகட்கு:-

RAINBOW TRAVEL &TOURS

32/2, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(அபிநயா நகைமாடத்துக்கு மேல்)

தொலைபேசி - 2223918, 0777 328219

குறிப்பு:- எமது ஸ்தாபனம் கொழும்பை தலைமை அலுவலகமாகக் கொண்டு இயங்குகிறது.

(அ)

# ஓரணியில் திரண்டன எதிர்க்கட்சிகள்

## நேபாள மன்னருக்கு எதிர்ப்பு வலுக்கிறது

(காத்மண்டு)

நேபாளத்தில் மன்னர் ஞானேந்திராவுக்கு எதிராக ஐந்து முக்கிய கட்சிகள் ஒரே அணியாகக் கைகோர்த்துள்ளன.

நெருக்கடி நிலையை விலக்க வலியுறுத்தியும், அரசியல் கட்சித் தலைவர்களை விடுதலைசெய்யக் கோரியும் தொடர் ஆர்ப்பாட்டத்தை இவை கூட்டாக அறிவித்துள்ளன.

நேபாளத்தில் கடந்த பெப்ரவரி முதலாம் திகதி முதல் நெருக்கடி நிலை அமுலில் உள்ளது. அரசியல் கட்சித் தலைவர்கள், பத்திரிகையாளர்கள் எனப்பலரும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் முக்கிய எதிர்க் கட்சிகளான நேபாள காங்கிரஸ், நேபாள கம்யூனிஸ்ட் ஆகியன உட்பட ஐந்து முக்கிய கட்சிகள் ஒரே அணியில் திரண்டுள்ளன. மன்னர் ஞானேந்திரா தனது தலைமையிலான ஆட்சியை விலக்கிக்கொள்ள வேண்டும். நெருக்கடி நிலை வாபஸ பெறப்படவேண்டும். மக்களின் உரிமைகள் அனைத்தும் உறுதிப்படுத்தப்படுவதோடு, சிறையில் அடைக்கப்பட்டுள்ள அரசியல் தலைவர்கள, பத்திரிகையாளர்கள் அனைவரையும் விடுவிக்கவேண்டும் என்று வலியுறுத்தி இவை கூட்டாக ஆர்ப்பாட்டம் நடத்த முடிவு செய்துள்ளன.

சர்வதேச பெண்கள் தினமான மார்ச் 8ஆம் திகதி அனைத்துக் கட்சிகளும கூட்டுப்போராட்டத்தைத் தொடர்ச்சியாக நடத்துவது என்றும், இந்தப் போராட்டங்களில் பொதுமக்கள், பத்திகையாளர்கள், அறிஞர்கள், மற்றும் அமைதியை விரும்பும் அனைத்துத்தரப்பினரும் கலந்துகொள்ளலாம். ஐந்து கட்சிகளும் கூட்டாக வெளியிட்ட அறிக்கையில் அழைபபு விடுக்கப்பட்டுள்ளது.

(ற)



இந்திய நாடாளுமன்றத்தின் நிதி நிலை அறிக்கைக் கூட்டத் தொடர் நேற்றுமுன்தினம் குடியரசுத் தலைவர் டாக்டர் அப்துல் கலாமின் உரையுடன் ஆரம்பமானது. நாடாளுமன்றத்திற்கு வந்த அப்துல் கலாம், சபாநாயகர் சோம்நாத் சட்டர்ஜி, பிரதமர் மன்மோகன்சிங், நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் குலாம் நபி ஆசாத் ஆகியோர் வரவேற்று அழைத்துச் செல்கின்றனர்.

## வெளிநாடுகளுக்கு உதவும் நேபாளத்திற்கு

## மாவோயிஷ்டுகளால் தொடர்ந்தும் தலையிடி

(காத்மண்டு)

உலகில் எங்காவது கலவரம், சண்டை மூண்டால் அந்தப் பகுதிக்கு அமைதி காக்கும் பணிக்குச் செல்வதில் பெயர் பெற்றது நேபாள இராணுவம்.

ஐ.நா ஆதரவிலான அத்தகைய பணிக்கு பல தடவை சென்றுள்ளது. சியாராலியோன், கிழக்கு தைமூர், கோசவோ, காங்கோ, லைபீரியா, புருண்டி, லெபனான் என ஆபத்து மிக்க பல பகுதிகளில் அமைதி காப்புப் பணியில் நேபாள இராணுவம் ஈடுபட்டுள்ளது.

இப்போது கூட ஐ.நா அமைதி காப்புப் படையில் அதன் 3000 வீரர்கள உள்ளனர். 50 ஆண்டுகளுக்கும் மேலாக இத்தகைய பணியில் ஈடுபட்டு வருகிறது நேபாளம்.

சர்வதேச அமைதி காப்புப் பணிக்காக 1959ஆம் ஆண்டிலிருந்து தமது படைகளை நேபாளம் அனுப்பி வருகிறது. 45000 வீரர்கள் அத்தகைய பணியில் ஈடுபட்டுள்ளனர். ஆனால், தற்போது நேபாளத்தில் ஏற்பட்டுள்ள மாவோ தீவிரவாதிகளின் பிரச்சினை, சொந்த நாட்டிலேயே சண்டையிட வேண்டிய கசப்பான நிலையை அதற்கு ஏற்படுத்தி உள்ளது.

(ற)

## புகைப்பிடித்தலுக்கு எதிராக

## 168 நாடுகள் ஒப்பந்தம்

புகைப்பிடித்தல் காரணமாக உலகெங்கும் ஆண்டுக்கு 50 லட்சம் பேர் நோய்வாய்ப்பட்டு இறக்கின்றனர்.

இதைக் கட்டுபடுத்தாமல் போனால 2020ஆம் ஆண்டளவில் 1 கோடி பேர் வரை ஆண்டுக்கு இறக்க நேரிடும.

எனவே, உலக சுகாதார அமைப்பு ஒப்பந்தம் ஒன்றைத் தயாரித்துள்ளது. உலக நாடுகளை வலியுறுத்திப் புகைப்பிடித்தலுக்கு எதிராக புதிய கட்டுப்பாட்டுச் சட்டங்களை நிறைவேற்ற இந்த ஒப்பந்தம் உதவும்.

இதி[illegible] இந்தியா, இங்கிலாந்து, கனடா அவுஸ்திரேலியா உட்பட 168 நாடுகள் கையெழுத்திட்டுள்ளன.

அமெரிக்கா இன்னும் முழுமையாக இந்த ஒப்பந்தக் கருத்துக்களை அமுலாக்கச் சம்மதிக்கவில்லை என்று கூறப்படுகிறது.

மற்ற நாடுகள் இந்த ஒப்பந்தப்படி இன்னும் 5 ஆண்டுகளில் புதுப்புதுக் கட்டுப்பாடுகளை சடடம் மூலம் நிறைவேற்றவுள்ளன.

(ற)

WORLD NEWS உலக தரிசனம்

## போலிப் பொருட்கள் விற்பனை மூலம்

## தீவிரவாதிகள் பணம் வசூலிப்பு

(நியூயோர்க்)

பிரபல கம்பனிகளின் பெயர்களில் வெளியிடப்படும் போலிப் பொருட்களில் கிடைக்கும் வருவாய தீவிரவாதிகளின் வளர்ச்சிக்கு அனுப்பப்படுவது பொலிஸ் விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது.

பிரபலமான • பெரிய நிறுவனங்களின் பொருட்களை அப்படியே கொப்பியடித்துப் போலிப் பொருட்களைத் தயாரிக்கும் நடவடிக்கை பல நாடுகளில் நடநதுவருகறது.

அப்படிப்பட்ட பொருட்களின் விற்பனையில் கிடைக்கும் வருவாய் தீவரவாதிகளின் வளர்ச்சிக்கு அனுப்பப்படுவதாக அமெரிக்கப் பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

இது குறித்து அமெரிக்க பொலிஸ கமிஷனர் ரேமண்ட் கெல்லி கூறியதாவது,

நியூயோர்க் நகரில் போலிப் பொருட்கள் விற்பனை மூலம் கிடைத்த பணத்தை ஹமாஸ், ஹிஸ்புல்லா ஆகிய தீவிரவாதிகளுக்கு அனுப்பி வைத்ததற்கான ஆதாரங்கள் கிடைததுள்ளன.


இவை அமெரிக்காவால் தீவிரவாதக்குழுக்கள் என அறிவிக்கப்பட்டவை. அப்படிப்பட்ட விற்பனையின் மூலம் அல் -ஹெய்டா அமைப்புக்குப் பணம் போனதற்கான ஆதாரம் எதுவும் இல்லை.

உலக வர்த்தகத்தில் போலிப் பொருட்களின் விற்பனை 6 சதவீதம் என்று கணக்கிடப்பட்டுள்ளது. போலிப் பொருட்கள் மூலம் 22 லட்சத்து 80 ஆயிரம் கோடி ரூபாய் வர்த்தகம் நடக்கிறது.

வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் மூலம் தீவிரவாதிகள் பணப்பரிவர்த்தனை செய்வதை பெருமளவில தடுத்துவிட்டதால், தீவிரவாதிகள் புதிய வழிகளில் இறங்கியுள்ளனர் எனக் கூறினார்.

சர்வேதச சட்டங்களை நடைமுறைப்படுத்தினால் போலிப் பொருடகளின் விற்பனையைத் தடுக்கமுடியும் என்று வக்கீல்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

(ற)



இந்தியா சென்றுள்ள அமெரிக்க செனட்டரும், முன்னாள் அமெரிக்க அதிபர் கிளிண்டனின் மனைவியுமான ஹிலாரி கிளிண்டன் நேற்று முன்தினம் புதுடில்லியில் பிரதமர் மன்மோகன் சிங்கை அவரது இல்லத்தில் சந்தித்துப் பேசினார்.

## சதாம் உசேனின் சகோதரர் ஈராக்கில் கைது செய்யப்பட்டுள்ளார்

(பக்தாத்)

ஈராக்கில் சதாம் உசேனின் ஒன்றுவிட்ட சகோதரர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

அமெரிக்கப் படையினரால் தேடப்பட்டு வந்த மிக முக்கிய நபரான இவரின் கைதை ஈராக் இடைக்கால அரசு உறுதிப்படுத்தியுள்ளது.

ஈராக்கின் முன்னாள் அதிபர் சதாம் உசேன் கைது செய்யப்பட்டு தற்போது சிறையில் இருக்கிறார். அவரது அரசில் இடம்பெற்றிருந்த முக்கிய தளபதிகள் பலர் இன்னமும் தலைமறைவாக இருந்து வருகின்றனர்.

இந்நிலையில் சதாம் உசேனின் ஒன்றுவிட்ட சகோதரர் சபாவி இப்ராகிம் அல்ஹசன் என்பவர் கைது செய்யப்பட்டுள்ளார். இவரது கைது குறித்து முதலில் உறுதிப்படுத்தாத தகவல்கள் வெளிவந்தன. பின்னர் இவர் கைது செய்யப்பட்டதை ஈராக் இடைக்கால அரசின் உள்துறை அமைச்சக உளவுப்பிரிவுத் தலைவர் அலிகமல் உறுதிப்படுத்தினார்.

இதுதொடர்பாக மேலதிக விபரங்கள் எதையும் தெரிவிக்க அவர் மறுத்துவிட்டார். கைது செய்யப்பட்டுள்ள சாவாவி இப்ராகிம் அல்ஹசன் சதாம் உசேனின் ஒன்றுவிட்ட சகோதரர் எனபதோடு அவரது நெருங்கிய ஆலோசகராகவும் இருந்துள்ளார்.

சதாம் அரசின் மிக முக்கியமான உளவுப்பிரிவுத் தலைவராகவும் இவர் பதவிவகித்துள்ளார்.

அமெரிக்கக் கூட்டணிப் படையினரின் 'தேடப்படுவோர்' பட்டியலில உளள 55 பேர்களில் இவரது பெயர் 36வது இடத்தில் உள்ளது. சபாவி இப்ராகிம் அல்ஹசனை அமெரிக்கப் படையினர் கைது செய்தனரா? அல்லது ஈராக் படையினர் கைது செய்தனரா? என்பது குறித்துத் தெளிவான தகவல்கள் எதுவும் இல்லை.

இதற்கிடையில் ஈராக்கின் மோசூல் நகரில் அரசு அலுவலகக் கட்டடத்தில் குண்டு வெடித்ததில் இரண்டு பேர் பலியாகியதுடன் மூன்று பேர் படுகாயமடைந்துள்ளனர்.

(ற)

## 'மிஸ் எச்.ஐ.வி' போட்டி



மிஸ் வேர்ல்ட், மிஸ் யுனிவர்ஸ, மிசஸ் வேர்ல்ட் ஆகிய அழகிப் போட்டிகளைப் பற்றி நாம் அறிந்திருப்போம்.

ஆனால், ஆபிரிக்கக் கண்டத்தின் போஸ்ட்வானா நாட்டுத் தலைநகர் கோபோரோனில் 'மிஸ் எச்.ஐ.வி' என்ற வித்தியாசமான அழகிப்போட்டி நடத்தப்பட்டது.

இதில் 21 வயது முதல் 35 வயதுக்குட்பட்ட எய்ட்ஸ் பாதித்த பெண்கள் கலந்துகொண்டனர். இவர்களில் சந்தியா லெஸ்கோமா என்ற அழகி 'மிஸ் எச்.ஐ.வி'யாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். படத்தில் அவரையும் (நடுவில் அமர்ந்திருப்பவர்) 2வது, 3வது இடம்பிடித்த அழகிகளையும் காணலாம்.

(ற)

## மிகப்பழைய விஸ்கி போத்தல்

ஸ்கொட்லாந்து நாட்டில் உள்ள ஒரு நிறுவனத்தில் உலகின் மிகப் பழைய விஸ்கி போத்தல் உள்ளது.

ஸ்கொட்லாந்து நாட்டில் பிரபல மது தயாரிப்பு நிறுவனம் உள்ளது. இங்கு உலகிலேயே மிகப் பழமையான மால்ட் விஸ்கிப் போத்தல்கள் இருந்தன. இந்தப் பிரிவில் கடைசிப் போத்தல் இப்போது விற்பனைக்கு ஹொங்கொங் நாட்டுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

ஹொங்கொங் விமான நிலையக் கடையில் அந்தப் போத்தல் தான் அனைவர் கவனத்தையும் கவரும் என்று கூறப்படுகிறது.

முன்னதாக 1937ஆம் ஆண்டில் லெண்பிட்டிச் ரேர் கலெக்ஷன் வகையைச் சேர்ந்த இந்த விஸ்கி மதுவை போத்தலில் அடைக்கும் முன்பு 64 வருடங்கள் ஒரு பெட்டியில் பக்குவப் படுத்தினர். பின்னர் போத்தல்களில் அடைத்தனர்.

6போத்தல்களை ஹொங்கொங விமான நிலையக் கடை விலைக்கு வாஙகியது. இதில் கடைசிப்போத்தல் இப்போது அனுப்பப்பட்டுள்ளது. முன்பு இந்த வகைப் போத்தல் ஒன்று ரூபா இரண்டரை லட்சம் வீதம் ஸ்கொட்லாந்து நிறுவனத்தால் விற்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(ற)



# சிறுவர் அரங்கம்



## பந்து

பந்து பந்து பந்து
இது பாடி அடிக்கும்
பந்து

நல்ல நல்ல பந்து
இது நாங்கள்
அடிக்கும் பந்து

அடிக்க அடிக்க
மிதக்குது
மிதந்து மிதந்து
பாயுது

அமத்த அமத்த நசியிது
காற்று உள்ளுக்குள் இருக்குது

இறப்பருக்குள் காற்று
இனிய பந்து ஆனது

கூடி ஆடி அடித்து
இன்பம் தேடிக் கொள்வோம்
மாலை நேரம் மட்டும்
பந்து அடித்து மகிழ்வோம்.

*செம்பியின் செல்வி.*



## விடுகதைகள்

1. உயரம் பறக்கும் ஊன்றுகோலில் நிற்கும் அது என்ன?
2. உயிர் இல்லாத நீதிபதி ஒழுங்காக நியாயம் சொல்கிறார் அவர் யார்?
3. உள்ளூர் உத்தமிக்கு உள்ளங்கையில் ஓட்டை அது என்ன?
4. உயிரோடு இருந்தால் சிவப்பு செத்தபின் கறுப்பு அது என்ன?
5. உருவம் இல்லாத மனிதன் உலகம் எல்லாம் சுற்றுகிறான் அவன் யார்?
6. உச்சாணிக் கொம்பிலே ஒய்யாரமாய் ஒரு இனிப்புப் பொட்டலாம் அது என்ன?

*ச.மாலதி, அராலி.*

## பெரியது சிறியது

* உலகிலேயே மிகப் பெரிய நூல் எகிப்தில் நைல் ஆற்றங்கரை மீதுள்ள தீபிஸ் கோயிலில் உள்ளது. அந்தப் புத்தகத்தின் ஒவ்வொரு பக்கமும் 138 அடி அகலம்.

* ஜப்பானில் உள்ள ஒரு புத்தகத்தில் இருநூறு பக்கத்தில் இருநூறு ஜப்பானியக் கவிதைகள் இருக்கின்றன. அப்புத்தகத்தின் நீளம் 4.மி.மி, அகலம் 2.8 மி.மி, உயரம் 1மி.மி, நிறை 1 கிராமுக்கும் குறைவு.

## வரிக்குதிரைகள்

வரிக்குதிரைகள், சாதாரண பந்தய குதிரைகளின் அளவே உயரமுள்ளதாகும். இவற்றின் உடல் முழுவதும் கறுப்பும் வெள்ளையும் கலந்த நிறப்பட்டைகள் வரி வரியாகக் காணப்படும். அத



னால் இவை வரிக்குதிரை எனப் படுகின்றன.

ஆபிரிக்காவின் புல்வெளி படர்ந்த சமவெளிப் பகுதியில் இவை மிகுதியாக வாழ்கின்றன. அதிகமாக அருகில் நீர்நிலைகள் உள்ள இடங்களிலேயே இவை வாழும். ஏனெனில், இவற்றுக்கு அடிக்கடி நீர் பருகும் பழக்கம் உண்டு. சிங்கம் போன்ற கொடிய காட்டு விலங்குகளுக்கு விரும்பமான இரை வரிக்குதிரை.

வரிக்குதிரைகள், எதிரிகளிடம் இருந்து தப்பிக்கத் தன் முன் தாடையிலுள்ள வெட்டுப் பற்களையும் உறுதியான தம் பின்னங்கால் களையுமே பயன்படுத்துகின்றன. இவை தம் வெட்டுப் பற்களால் பகை விலங்குகளைக் கடிக்கும். பின்னங்கால்களால் வலிமையுடன் உதைக்கும். இதனால் தாக்குண்ட விலங்குகள் வலிதாங்க முடியாமல் அலறிக்கொண்டு ஓடிவிடும்.

வரிக்குதிரைகளில் பல வகைகள் உள்ளன. கிராண்ட் ஜீப்ரா, கிரேவி ஜீப்ரா, பாணிடெகு வாக்கா மற்றும் மவுண்டைன் ஜீப்ரா என்பவை புகழ் வாய்ந்தவை.

பிற வரிக்குதிரைகளுக்கு இல்லாத சிறப்பு மவுண்டைன் வகைக்கு உண்டு. இவற்றின் மூக்கு செந்நிறத்தில் இருக்கும். இவை பார்வைக்குக் கவர்ச்சியான தோற்றத்துடன் காணப்படும். இவற்றின் உயரம் 1.3மீற்றர்.

கிரேவி ஜீப்ராக்கள், ஆபிரிக்காவின் தென்கிழக்குப் பகுதியில் வாழ்ந்து வருகின்றன. இவற்றின் உயரம் ஒன்றரை மீற்றர். வரிக்குதிரைகளில் மிகப் பெரியது இவை. எதியோப்பியா, கென்யா ஆகிய நாடுகளிலும் இவ்வகை வரிக்குதிரைகளைக் காணலாம். இவற்றில் உடலில் காணப்படும் வண்ண வரிக்கோலங்கள் நேராகவும் நெருக்கமாகவும் இருக்கும்.

## சமைப்பதை நிறுத்தாத சட்டி

முன்னொரு காலத்தில் காட்டின் அருகே ஒரு சிறு குடிசையில் ஏழைச் சிறுமி ஒருத்தி தனது தாயாருடன் வசித்து வந்தாள். அவர்கள் மிக மிக ஏழைகள். அவர்கள் வீட்டில் உண்பதற்கு உணவின்றிப் பட்டினியால் வாடினார்கள்.

ஒருநாள் பசி பொறுக்க முடியாத தாய் அச்சிறுமியிடம் சிறு கூடை ஒன்றைக் கொடுத்து, காட்டிற்குச் சென்று பழங்கள் பிடுங்கி வருமாறு அனுப்பிவைத்தாள்.


அச்சிறுமியும் கூடையுடன் காட்டின் நடுவே சென்றாள். அப்பொழுது அவளின் முன்னே வயதுபோன கிழவி ஒருத்தி வந்தாள். ‘‘இந்தப் பயங்கரக் காட்டின் நடுவே எப்படிக் குழந்தாய் வந்தாய்? இங்கு என்ன செய்கின்றாய்?’’ என்று அந்தக் கிழவி அவளிடம் கேட்டாள்.

சிறுமியும் வீட்டில் உண்பதற்குச் சிறிதளவு உணவேனும் இல்லாததால் பழங்கள் பிடுங்க அங்கு வந்ததாகக் கூறினாள். அதைக்கேட்ட அக் கிழவி ‘‘சிறிது பொறுத்துக் கொள் குழந்தாய்’’ என்று சொல்லிவிட்டு, சிறிது தொலைவு சென்று மறைந்தாள்.

சிறிதுநேரத்தின் பின் அச்சிறுமியின் முன் தோன்றினாள் கிழவி. அவள் கையில் சமையல் செய்யும் சட்டி ஒன்று இருந்தது.

அந்தச் சட்டியைச் சிறுமியின் கையில் கொடுத்துவிட்டு ‘‘இந்தச் சட்டி சாதாரண சட்டியில்லை. இது ஒரு மந்திரச் சட்டி. இதனை அடுப்பில்வைத்துவிட்டு ‘சட்டியே சட்டியே உணவு தா’ என்று சொன்னால் போதும். இது உடனே சமைத்து உணவைத் தந்துகொண்டே இருக்கும். ‘சட்டியே போதும் இனி நிறுத்திவிடு’ என்று சொன்னால் மாத்திரம்தான் இது சமையலை நிற்பாட்டும்’’ என்று சொல்லி அந்தச் சட்டியை அச்சிறுமிடம் கொடுத்துவிட்டாள்.

சிறுமியும் அக்கிழவிக்கு நன்றி சொல்லிவிட்டு வீட்டிற்கு வந்தாள். அதன்பிறகு அச்சிறுமி அந்தக் கிழவி சொன்ன மாதிரியே சட்டியை அடுப்பில் வைத்து ‘சட்டியே சட்டியே உணவு தா’ என்று கேட்க சட்டியும் சமைத்து உணவு கொடுத்தது. ‘சட்டியே போதும் இனி நிறுத்திவிடு’ என்று சொல்ல சட்டியும் சமையலை நிறுத்தியது. இதன்



பின்னர் அச்சிறுமியும் தாயும் பசியின்றிச் சந்தோசமாக வாழ்ந்து வந்தார்கள்.

ஒருநாள் அச்சிறுமி விளையாடுவதற்காக வெளியே சென்றுவிட்டாள். அந்தநேரம் அச்சிறுமியின் தாய்க்குப் பசித்தது. அதனால் அவளே அச்சட்டியை எடுத்து அடுப்பில் வைத்து ‘‘சட்டியே சட்டியே உணவு தா’’ என்றாள். சட்டி உடனே சமைக்கத் தொடங்கி உணவைத் தரத் தொடங்கியது. அச்சிறுமியின் தாய்க்கு அச்சட்டியை என்ன சொல்லி நிறுத்துவது என்று தெரியவில்லை. ‘‘போதும் போதும்’’ என்று கத்தினாள். ஆனால் சட்டியோ தொடர்ந்து சமைத்துக் கொண்டேயிருந்தது. சமைத்த உணவெல்லாம் சட்டியை விட்டு வழிந்து நிலத்தில் பெருகத் தொடங்கியது.

‘‘சட்டியே சொல்வதைக் கேள்’’ என்று திரும்பவும் அவள் கத்தினாள். ஆனால் சட்டியோ தொடர்ந்து சமைத்த படியே தான் இருந்தது.

உணவு சமையலறையை விட்டுப் பெருகிக் கதவின் வழியே வெளியே பெருகியது. தொடர்ந்து வீதி வழியேயும் பெருகி அந்தக் கிராமத்தின் வழியே பெருக்கெடுத்தது. கிராம மக்கள் எல்லோரும் ஆச்சரியத்துடன் இதனைப் பார்த்தார்கள்.

அவர்களும் அவ்வுணவை எடுத்துக்கொண்டு தங்கள் வீட்டிற்குச் சென்றார்கள். கிராமத்தின் கடைசி வீட்டில் விளையாடிக்கொண்டிருந்த அச்சிறுமியும் ஆரவாரம் கேட்டு வீட்டிற்கு வெளியே வந்து எட்டிப் பார்த்தாள்.

உணவு ஆறுபோல் பெருக' ஓடுவதைக் கண்டு தன்வீட்டில் இருந்துதான் அது பெருகுகின்றது என்று அவளுக்கு விளங்கியது. தன் வீட்டிற்கு ஓடிச் சென்றாள்.

‘‘சட்டி போதும் இனி நிறுத்து’’ என்று சட்டியைப் பார்த்துக் கத்தினாள். சட்டியும் சமைப்பதை உடனே நிறுத்தியது.

அவள'ன் தாய்க்குத் தான் செய்த தவறு விளங்கியது. அன்றுமுதல் ஊர் மக்களுக்கும் உணவு கொடுத்து எல்லோரும் சந்தோசமாக வாழ்ந்தார்கள்.

## நிறந்தீட்டுங்கள்

அன்புக் குழந்தைகளே! விதம் விதமாக வர்ணம் தீட்ட உங்களுக்கு ஆசைதானே. இதோ இங்கே தரப்பட்டிருக்கும் படத்திற்கு வர்ணம் தீட்டி மகிழுங்கள்.



### விடைகள்
### விடுகதைகள்

1. கொடி.
2. தராசு.
3. வடை.
4. நெருப்பு.
5. காற்று.
6. தேன்கூடு.

## இன்று ஒரு தகவல்

# ஆகிரி ராகம்

ஒருநாள் நாரதர் ஒரு பாட்டு பாடிக்கொண்டே வந்தார். நாரதர் ஏதாவது சிக்கலை உருவாக்குவதில் வல்லவரே. அவர் ஏன் பாட்டுப் பாடிக் கொண்டு வந்தார் என்று கேட் கிறர்களா? இந்த விஷயத்தில் அவரே ஒரு சிக்கலில் மாட்டிக்கொண்டார். அதன்பின் ஒரு வழியாகத் தப்பி வந்தார். அந்தக் கதையைக் கேளுங்கள்.

நாரதர் பாடிக் கொண்டு வந்தார் என்று சொன்னேன். அல்லவா? அவர் ஆகிரி ராகத்தில் அந்தப் பாடலைப் பாடிக்கொண்டு வந்தார். இந்த ராகத்தை நாம் சரியாகத் தான் பாடுகிறோமா? என்ற சந்தேகம் அவருக்கு. உடனே சரஸ்வதியிடம் போய் கேட்டார்." நான் பாடும் இந்த ராகம சரியாக இருக்கிறதா?" என்று.

அதற்கு சரஸ்வதி தேவி என்ன சொன்னார் தெரியுமா? "நீர் பாடுவது சரியா இல்லையா என்பதை ஆஞ்சநேயரிடம் போய் கேட்டுத் தெரிந்துகொள்" என்று சொன்னார். நாரதருக்கு என்னவோ மாதிரி ஆகிவிட்டது. நான் எங்கே... ஆஞ்சநேயர் எங்கே அவரிடம் போய் கேட்டுத் தெரிந்து வைத்திருக்கும் அளவுக்கு நிலமை ஆகிவிட்டதே என்று நினைத்தார். இருந்தாலும் சரஸ்வதி சொன்ன பின் சும்மா இருக்கமுடியுமா?

நேராகப் போனார் ஆஞ்சநேயரிடம். பாடிக் காட்டி "இது சரியா?" என்று கேட்டார். ஆஞ்சநேயர் நாரதரை அழைத்து கொண்டுபோய் ஒரு மலையில் நிறுத்தி "இப்போது பாடு. அது சரியாக இருந்தால் இந்த மலை உருக வேண்டும்" என்றார். நாரதர் பாடினார் மலை உருகவில்லை." சரி இப்போது நான் பாடுகிறேன் பார்" என்று கூறி விட்டு ஆஞ்சநேயர் பாடினார். மலை உருக ஆரம்பித்தது.

" நான் நின்று கொண்டிருக்கும் மலை உருகுகிறதே எனறு சத்தம் போட்டார் நாரதர். ஆஞ்சநேயர் பாதியில் பாட்டை நிறுததினார். உடனே உருகுவதும் நின்று விட்டது. உருகிய மலை உறைய ஆரம்பித்துவிட்டது. நார தரின் கால் பாறையில் மாட்டிக்கொண்டது. எடுக்க முடியவில்லை. மீண்டும் சத்தம் போட்டார். ஆஞ்சநேயர் மறுப டியும் பாடி நாரதரைக் காப்பாற்றினார். நாரதர் தப்பித் தோம் பிழைத்தோம் என்று எட்டத்தில் வந்து நின்று கொண் டார். அவரது கோபம் குறையவில்லை அதனால் ஒரு சாபம் கொடுத்துவிட்டார். எப்படித் தெரியுமா? இந்த ஆகிரி ராகத் தை யார் பாடினாலும் அவருக்குச் சோறு கிடைக்கக் கூடாது என்று. அதனால் இந்த ராகத்தை இப்போது பாடு வதற்கு பயப்படுபவர்கள் உண்டு.

ஒரு சங்கீத வித்வான் இதை சோதித்துப் பார்க்க வேண் டும் என்று புறப்பட்டார். தயிர் சாதத்தைக் கட்டி எடுத்துக் கொண்டு ஒரு மூங்கில் காட்டுக்குப் போனார். வளைந்தி ருந்த ஒரு மூங்கிலில் சோற்று மூட்டையைக் கட்டினார். கீழே உட்கார்ந்து ஆகிரி ராகம் பாடினார். பாடி முடித்து விட்டு கண்ணைத் திறந்து பார்த்தார். சோற்று மூட்டையைக காணவில்லை என்ன ஆயிற்று தெரியுமா? சூரியஒளி படப பட வளைந்திருந்த மூங்கில் நிமிர்ந்துவிட்டது. கட்டுச் சோறு கைக்கு எட்டாத தூரத்திற்குப் போய்விட்டது. சோறு கைக் கும எட்டவில்லை வாய்க்கும் எட்டவில்லை.

பசி வயிற்றைக் கிள்ளுகிறது என்ன செய்வதென்று யோசித்தார். ஒரு பெரிய செல்வந்த வீட்டிற்குப் போனார். " பசிக்கிறது" என்றார். உடனே இவரை உட்கார வைத்து இலை போட்டார்கள்.

சோறு போட்டார்கள். பசியோடு அதைப் பார்த்ததும் இவருக்கு சந்தோஷம் தாங்கமுடியவில்லை. "ஆகிரியால் இனி எதுவும் முடியாது" என்று சொல்லிக் கொண்டே சோற றைக் கையில் எடுத்தார். அதற்குள் இருவர் வந்து அவரை இழுத்துச் சென்று வெளியே தள்ளிவிட்டார்களாம். என்ன விஷயம் தெரியுமா? அந்த செல்வந்தரின் மனைவியின் பெயர் ஆகிரியாம். ஆகிரி ராகம் பாடினால் சோறு கிடைக் காது என்பதற்கு இப்படியெல்லாம் கதைகள் உண்டு.

அது உண்மை என்ற நினைப்பில் பாடுவதற்குப் பயப்படு பவர்களும் உண்டு. ஆகிரிராகத்தை வைகைறைப் பொழு தில் சுத்தமாக வேறு ஸ்வரம் எதுவும் கலக்காமல் பாடி னால் சோறு கிடைக்காது என்பது ஒரு நம்பிக்கை அவ் வளவு தான். இவ்வளவும் இருந்தும் எனக்குத் தெரிந்த ஒரு சங்கீத வித்வான் தினமும் ஆகிரி ராகம் பாடிக் கொண்டே இருப்பார். அதுவும் வீட்டிற்குள்ளேயே அதிகா லை நேரம் பாடுவார். அவரை ஒருநாள் சந்தித்து " உங்க ளுக்கு மிகவும் தைரியம்" என்றேன். "ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்? " என்று கேட்டார். "ஆகிரி ராகத்தை அவ்வ ளவு துணிவாக உங்கள் வீட்டிலேயே பாடுகிறீர்களே" என்றேன். அவர் பரிதாபமாக என்னை நிமிர்ந்து பார்த் தார்."அப்படி இல்லை சார்! நான் எந்த ராகம் பாடினாலும் எங்கள் வீட்டில் சோறு கிடைக்காது சார்! அதனால் தான தைரியமாக அந்த ராகத்தைப் பாடுகிறேன்" என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# திருமலை பொது வைத்தியசாலையை நவீனமயப்படுத்த இந்திய அரசு உதவி

## இந்திய சுகாதார அமைச்சின் செயலாளர் தகவல்

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்ட பொது வைத்தியசாலை இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் நவீனமயப்படுத்தப்படவுள்ளது. இதுபற்றி ஆராய்வதற்காக இந்திய சுகாதார அமைச்சின் உதவிச் செயலாளர் திருமதி பவானி தியாகராஜா தலைமையிலான இந்தியக்குழுவினர் திருகோணமலைக்கு விஜயம் செய்தனர்.

பொது வைத்தியசாலையின் அத்தியட்சகர் திருமதி கெள.ஞானகுணாளன் இவர்களை வரவேற்று வைத்தியசாலையினை சுற்றிக் காட்டியதோடு குறைபாடுகளையும் எடுத்து விளக்கினார்.

இக்குழுவில் இந்தியத் தூதரக அதிகாரி சஞ்சீவ சுபைர் மற்றும் இந்திய மருத்துவ பேராசிரியர் பண்டிநாத், வைத்தியர் அசோக்குமார், ரவீந்திர கைடோமோ, சுபார்டோ மனிடோர் ஆகியோருடன சுகாதார அமைச்சின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் ஸ்டெரன்ஸ் சில்வா ஆகியோரும் அடங்கியிருந்தனர்.

பொது வைத்தியசாலையின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற நிகழ்வில் இந்திய சுகாதார அமைச்சின் உதவிச்செயலாளர் திருமதி பவானி தியாகராஜா உரையாற்றுகையில்,

இவ் வைத்தியசாலையின் முகப்பில் அமைக்கப்பட்டுள்ள கட்டடத் தோற்றம் தேவைகளை மறைப்பதாக இருக்கின்றது. வெளியில் இருந்து வருவோருக்கு நவீன வசதிகளைக் கொண்டதாக இம் மருத்துவமனை அமைந்திருக்கின்றது என்ற தோற்றப்பாட்டை காட்டுகின்றது. ஆனால் உள்ளே சென்று பார்த்த போதுதான் பல குறைபாடுகள் இருப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. இந்திய அரசாங்கம் இந்த வைத்தியசாலையை நவீன வசதிகளைக் கொண்டதாக அமைத்துக் கொடுக்கவுள்ளது.

சகல வசதிகளும் இங்கு ஏற்படுத்தப்படும். புதிதாக அமைக்கப்படும் கட்டடத்தில் மின்சார வசதிகள், நவீன தொலைத்தொடர்பு சாதன வசதிகள் என்பனவும் முழுமையாக அமைத்துக் கொடுக்கப்படும். மருத்துவமனைக்கு தொலைத் தொடர்பு வசதிகள் மிகவும் அவசியமானது என்றார்.

இந்நிகழ்விற்கு தலைமை வகித்த பொது வைத்தியசாலையின் அத்தியட்சகர் திருமதி கெள.ஞானகுணாளன் உரையாற்றுகையில்,

இவ் வைத்தியசாலை பொது வைத்தியசாலையாக பெயரளவிலேயே தரம் உயர்த்தப்பட்டுள்ளது. ஆனால் வசதிகள் இங்கு அதிகரிக்கப்படவில்லை. இங்கு 345 நோயாளர்கள் மாத்திரம் தங்கியிருந்து சிகிச்சை பெறக்கூடியதாக கட்டில் வசதிகள் இருக்கின்றன. ஆனால் சில வேளைகளில் அதிக நோயாளர்கள் இங்கு வருவதன் காரணமாக அவர்களை தங்கியிருக்க விடாது திருப்பி அனுப்பவேண்டிய தேவை ஏற்படுகின்றது. கடந்த இரண்டு வருடங்களாக இங்கு ஆளணித் தேவை நிவர்த்தி செய்யப்பட்டுள்ளது. 450 ஊழியர்கள் இங்கு கடமைபுரிகின்றனர். 127 தாதிகள் இங்கு சேவையாற்றுகின்றனர். இருப்பினும் இந்த வசதிகளும் போதுமானதாக இருக்கவில்லை எனறார்.

பிரதி சுகாதாரப் பணிப்பாளர் நாயகம் ஸ்டெரன்ஸ் சில்வா உரையாற்றுகையில்,

அரசாங்கம் 1977 ஆம் ஆண்டு தொடக்கம் மாவட்டத்தில் ஒரு வைத்தியசாலையை தரம் உயர்த்தும் திட்டத்தை முன்வைத்தது. இருப்பினும் திருகோணமலை வைத்தியசாலை அண்மையிலேயே தரம் உயர்த்தப்பட்டது. இதற்கு சுமார் 15 வருடங்கள் சென்றிருக்கின்றது என்றார்.

(ப)

# குடத்தனை கூட்டுறவுக் கிளையை மீண்டும் இயக்கக் கோரிக்கை

(துன்னாலை)

சுனாமி ஆழிப்பேரலையால் மூடப்பட்ட குடத்தனை பலநோக்குக கூட்டுறவுச் சங்க நிவாரணக் கிளைகள் மீண்டும் இயல்பு நிலைக்கு திரும்பாமையினால் இப் பகுதியில் மீளவும் தற்காலிக இருப்பிடங்களை அமைத்து குடியேறி வரும் மக்கள தமக்கான நிவாரணப் பொருட்களை பெற்றுக் கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

இப்பகுதி மக்கள் தமது கிராமத்தில் இருந்து அடுத்துள்ள மணற்காட்டு கிராமத்திற்கு இரண்டு கிலோமீற்றர் தூரம் வரை சென்று நிவாரணத்தினையோ அல்லது அத்தியாவசியப் பொருட்களையோ பெற வேண்டியுள்ளது.

எனவே இம் மக்கள் தாம் மீளக் குடியமரத் தொடங்கி வெகு நாட்களாகியும் கூட்டுறவுச் சங்கங்கள் மீளவும் குடத்தனைப் பகுதியில் ஆரம்பிக்கப்படாததையிட்டு மக்கள் விசனமடைந்துள்ளதோடு மேற்படி கூட்டுறவுக் கிளைகளை உடன் திறக்க ஆவன செய்யுமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(ப-113)

# 200 மீற்றர் தூர கடலோர பாதுகாப்பு சட்டம் வட-கிழக்கில் இறுக்கமாக அமுலாக்கப்படும்

## திலக் ரணவிராஜா தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் 200 மீற்றர் கடல் பாதுகாப்புச் சட்டம் கடுமையாக அமுல்படுத்தப்படும் ஏன்று அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் திலக் ரணவிராஜா மட்டக்களப்பில் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு முதலியார் வீதியில் இடைக்கால அனர்த்த முகாமைத்துவ பணிமனையொன்றை திறந்து வைத்த பின்னா அங்கு நடை பெற்ற வைபவத்தில் உரையாற்று கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அங்கு மேலும் உரையாற்றிய அவர்,

கடற் கரையிலிருந்து குறிப்பிட்ட 200 மீற்றர் தடை வலயத்திற்குள் எவரும் குடியேற அனுமதிக் கப்படமாட்டாகள். மீறி குடியேறுபவாகள் தடுக்கப்படுவார்கள். இதற்கான உத்தரவு பிறப் பிக்கப்பட்டுள்ளது.

வடகமு- கிழக்கில் 200 மீற்றா கடல் எல்லை. ஏனைய இடங்களில் 100 மீற்றர் கடல் எல்லை எனப் பலர் விமர்சிக்கின்றனர். இது நில மட்டத்தின் உயரம் தாழ்வு என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு நிர்ணயிக்கப்பட்டதே அல்லாமல் இதில் எவ்வித உள்நோக்கமும் இல்லை.

வடக்கு - கிழக்கு மிகவும் தாழ்வுப்பகுதி என்பதாலேயே இந்த வரையறை தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றார்.

பாதிக்கப்பட்ட மக்க ளின் மீள்குடியேற்றம் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த அவா, உடனடியாக மீள்குடியேற்றம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

எதிா வரும் மூன்று மாதங்களிற்குள் 64 ஆயிரம் வீடுகள் பாதிக்கப்படட பகுதிகளில் அமைக்கப்படவுள்ளது.

அதில் 11 ஆயிரம் வீடு கள் மட்டக்களப்பு மாவட்டததில் அமைக் கப்படும். எதிா வரும் ஏப்ரல் மாதமளவில் இந் தப்பணிகள் பூர்த்தியடைந்து விடும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(ப-9)

# வவுனியா விபத்தில் வயோதிபர் பலி

(வவுனியா)

வவுனியா புதுக்குளத்தில் நேற்று முன்தினம் அதிகாலை 2.00 மணிக்கு இடம்பெற்ற வீதி விபத்தில் உழவு இயந்திர சாரதி ஸ்தலத்திலேயே பலியானார்.

சூடு அடித்துவிட்டு சுந்தரபுரத்திலிருந்து சாஸ்திரி கூழாங்குளம் நோக்கி குளக்கட்டின் வழியாக வந்து கொண்டிருந்த இழுவைப் பெட்டியுடன் கூடிய உழவு இயந்திரம் குளத்தினுள் சாரதியின் கட்டுப்பாட்டையும் மீறி தலைகீழாகப் புரண்டதில் சாரதி இயந்திரத்திற்குள் அகப்பட்டு நசியுண்டு பலியானார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இழுவைப்பெட்டியில் பயணம் செய்த சிறுவன் ஒருவன் சிறுகாயங்களுடன் உயிர் தப்பியுள்ளான்.

இறந்தவர் புதுக்குளம் நலன்புரி நிலையத்தில் வசிக்கும் ஆ.பிரேமநாதன் (வயது 42)என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

(ச)

# சுகாதார விழிப்புணர்வு நடவடிக்கைகள் ஆரோக்கியமான சமூகத்தை கட்டியெழுப்பும்

## மருத்துவ விளக்கம்

அல்சர், மதுமேகம் என்னும் சலரோகம் (நீரிழிவு), இருதய ரோகம் மூன்றும் நம் மக்களிடையே பேசப்படும் பொதுவான வியாதிகளாகும். மக்களிடையே காணப்படும் வியாதிகளில நீரிழிவும் இருதய ரோகமும் காணப்படுவதற்குக் காரணம் மக்களுக்கு போதிய சுகாதார அறிவின்மையேயாகும்.

உ+ம்: பாடசாலை மாணவர்கள், தொழிற்சாலைகளில் பணிபுரியும் இளம் சமுதாயத்தினர்களிடையேயும் வயிற்றுப்புண் 40% மாணவர்களுக்கு சாதாரணமாகக் காணப்படுகின்றது.

ஆனால் சலரோகம், இருதய ரோகம் 40(நாற்பது) வயதைத் தாண்டிய மக்களிடையே 70% மாணவர்களிடையே பொதுவாகக் காணப்படும் வியாதியாகவுள்ளது.

இவ் வியாதிகள் ஏற்படுவதற்குக் காரணம் போதிய அறிவில்லாமை ஒன்று, இரண்டாவது போதிய வசதி படைத்த மக்கள் ஆகாரங்களை மிகப்பட உண்பதும் போதிய உடல உழைப்பும் இல்லாமையுமாகும்.

"பசித்த பின் புசி" என்பதற்கு ஏற்ப நடந்தால் நோயுள்ளவர்களும சுகம் பெறலாம், நோயற்றவர்களும் நோய் வராமல் பாது காத்துக் கொள்ளலாம்.

"லங்கனம் வரமௌஷதம்"
(பசிக்க இருந்தாலே, அரைவாசி நோயும் தீரும்)

ஆனால் அதற்கு மாறாக சமைத்ததும் புசித்தல் அல்லது உணவைக கண்டதும் புசிக்கும் பழக்கத்தினால் உடல் பருமன் அதிகரித்து ஜீரண சக்திக்குக் கோளாறுகளை ஏற்படுத்தி இருதய படபடப்பு, தேகத்தின் அசதி, உடற்பாரம் (கனதி), வேலை செய்வதற்குக் கஷ்டம், மனச்சஞ்சலம் போன்ற அறிகுறிகள் ஏற்படுகின்றது. இதனால் சோம்பல், கோபம், சுறுசுறுப்பற்ற நிலை ஏற்படுகின்றது.

மேலும் மேலும் ஆகாரத்தை உண்பதால் உடல் உறுப்புக்களில தளர்வு ஏற்படுகின்றது. உடலில் களைப்பு, சோர்வு, ஞாபக மறதி போன்ற குணங்கள் காணும். இந்நிலைமை ஏற்படக் காரணம் உடலில் சக்திக்குறைவே எனக் கருதி விற்றமின் மாத்திரைகள், ரொனிக் வகை,சக்தி மிகுந்த பால் வகைகளைப் பருக ஆரம்பிக்கின்றார்கள். இதனால் உடலில் ஆதார உறுப்புக்களில் மேலும் கஷ்டமான நிலை ஏற்படுகின்றது. இதனால் ஜீரணக்கோளாறு, மலபந்தம் சில சமயங்களில் ஆகாரம் புசித்தவுடன் மலங்கழித்தல் போன்ற குணங்கள் காணப்படும்.

அளவுக்கதிகமான உணவும், பலமான உணவும் ஜீரண உறுப்புக்களையும், சுவாச உறுப்புக்களையும், இரத்த ஓட்ட உறுப்புக்களையும் தளர்வடையச் செய்கினறது. பின்னர் பசி மந்தம், மலபந்தம், சிறு நீர் அடிக்கடியும் அதிகமாகவும் வெளியேறும். வியர்வை அதிகம்,சுவாசக் கஷ்டம், இருதயப் படபடப்பு ஏற்பட்டு மனம் பாதிக்கப்படுகின்றது. இக் குணங்குறிகளால் நான் ஒரு நோயாளி என்ற மனநிலை ஏற்படுகின்றது.

இவையே நாளடைவில் சலரோகம், இரத்த அழுத்த நோய் போன்ற நோய்களுக்கு வழிவகுக்கின்றன. எனவே மது மேகமும், இரத்த அழுத்தமும் வசதி படைத்த, உடல் உழைப்பு அற்ற மக்களிடையே காணும் பொதுவான நோயாகக் காணப்படுவது வழக்கமாகிவிட்டது.

இந்நோயிலிருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கு,

1. உடல் நிலைக்கும் கால நிலைக்கும் ஏற்ற உணவை உண்பது.

2. உடல் உழைப்புக்கும் வயதுக்கும் ஏற்ற உணவை உண்பது.

3. உண்ணும் உணவை மனச் சந்தோஷத்தோடு மென்று உண்பது.

4. பரம்பரையில் சலரோகம், இரத்த அழுத்தரோகம் உடையவர்கள் இளமையிலேயே உணவுக்கட்டுப்பாட்டைக் கடைப்பிடித்தல்வேண்டும். உ+ம் எண்ணெய் சேர்ந்த உணவுகளைக் குறைத்தல், உப்பு அதிகம் சேர்க்கக் கூடாது, இனிப்பு ஆகாரங்களைக் குறைப்பதும் நன்று. கிழங்கு வகைகளில் கருணைக்கிழங்கு தவிர்ந்த ஏனைய கிழங்கு வகைகளைத் தவிர்ததல் நன்று. கார்ப்பு, துவப்பு, சுவையுள்ள பாவற்காய், கண்டங்கத்தரி, வாழைப் பொத்தி, நாவற்பழம், அகத்தி, வேப்பம் பூ, வேப்பமபட்டைக் கஷாயம் போன்ற உணவுகளை அதிகம் உண்பது நன்று.

மேலே கூறிய அறுசுவைகளை அளவறிந்து உண்டால் வீரமும், தீரமும், அருளும், ஆண்மையும் பெறுவர்.

கோழையையும் குன்றென நிமிர்ந்து நிற்கச் செய்யும்.

முதிராத சிறு பருவத்தினரையும் சீறியெழும் சிறுத்தையென எழுந்து நிற்கச் செய்யும்.

புத்துணர்வும், புதுவாழ்வும் பெறத் துடிதுடிக்கும்.

'ஊனும் சோறும் வெறுத்து இனிது பாலிலே பெய்தனவும் பாகிலே கலந்தனவுமான பான வகைகளை மெதுவாகப் பருகி விருந்துண்டு' என்னும் வாக்கிற்கமைய பலமான ஆகாரங்களைக் குறைத்து கஞ்சி போன்ற பான வகைகளை மிகையாக உண்பதால் விருந்தும் மருந்தாகும்.

இனி இளவயதினரிடையே காணும் வயிற்றுப் புண் தோன்றுவதற்குக் காரணத்தைப் பார்ப்போம். நம் நாட்டு மக்களிடையே கோப்பி, தேயிலை, மது, புகையிலை, வெற்றிலை போன்றவற்றின் பாவனை சம்பிரதாய பழக்கமாகிவிட்டது. பொது இடங்களிலும சரி, வீட்டில் நடக்கும் வைபவங்களிலும் சரி இப்பாவனை வழக்கமாகக் கைக்கொள்ளப்படுகின்றது. இப்பழக்கம் எவ்வளவு தூரம சிறுவர்களின் உடலைப்பாதிக்கின்றது பற்றிப் பெரியவர்கள் உணர்வதில்லை.

"தொட்டிலில் பழக்கம் சுடுகாடு வரை"

சிறுவயதிலேயே தேநீர், கோப்பி வகைகளைப் பருகும் போது உடலுக்கு ஒவ்வாதவை என்ற உணர்வு பிள்ளைகளுக்குத் தோன்றுவதற்கு இடமேயில்லை. பெரியவர்கள் இப் பழக்கத்தை கலாசாரமாகப் பேணும்போது சிறுவர்கள் இதைத் தொடர்ந்து பழக்கததில் கொண்டுவருவதில் வியப்பேதுமில்லை.

இந்தியாவில் உறவு கலக்கும் வைபவங்களில் முதலில் மோர் சாப்பிடுகிறீர்களா? சாதம் சாப்பிடுகிறீர்களா? என்று தான் கேட்பார்கள். கிராமப்புற மக்கள் கஞ்சி சாப்பிடுகிறீர்களா? பால் சாப்பிடுகிறீர்களா? பழம் சாப்பிடுகிறீர்களா? என்று கேட்பார்கள். ஆனால் நாட்டுப்புற நாகரிகம் படைத்த மக்களிடையே ரீ சாப்பிடுகிறீர்களா? கோப்பி சாப்பிடுகிறீர்களா? என்று கேட்பது வழக்கமாகிவிட்டது. மேலும் புகைத்தல் பழக்கம் உண்டா, சுருட்டுக் கொடுக்கும் வழக்கமும் உண்டு. இது சுகாதாரத்தைக் கெடுத்து நாகரிகத்தை வளர்க்கும் காலமாகிவிட்டது. இதனால் ஆரோக்கியம் குன்றிய இளம சமுதாயத்தை நாமே உருவாக்கியவர்கள் ஆகின்றோம்.

காலை எழுந்தவுடன் காப்பி, தேநீர் பருகுவது சிறுவர்களின் உடலுக்கு மிகவும் ஆபத்தை ஏற்படுத்தும் என்று அறியாத பெற்றோர்கள் பிள்ளைகளைத் தேநீர், காப்பி போன்ற பானங்களைப் பருக வைப்பதில் எவ்வளவு பிரயத்தனப்படுகின்றார்கள். சில சிறுவர்கள் இயற்கையாகவே தேநீர், கோப்பியைப் பருகுவதில்லை. ஆனால் பெற்றோர்களால் நிர்ப்பந்திக்கப்பட்டு இவற்றைப் பருகுகிறார்கள். இதற்குக் காரணம் போதிய சுகாதார அறிவின்மையே. இதனால் அவர்களை அறியாமலே அவர்கள்பிள்ளைகளுக்கு நோய்க் காரணிகளாக இருக்கிறார்கள். சில சநதர்ப்பங்களில் பிள்ளைகள் காலை உணவை உண்பதில் கவனம் எடுப்பதில்லை. ஏனெனில கிராமபபுறத்தில் உள்ள பிள்ளைகள் நகரப்புறப் பாடசாலைகளுக்கு செல்கிறார்கள். இதனால் பிரமாணநேரம் அதிகரிக்கின்றது. இதற்கு முக்கிய காரணம் இடப்பெயர்வு, அடுத்தது தமது பிள்ளைகள் நகர்ப்புறப் பாடசாலைகளில் கல்வி கற்கவேண்டும் என்ற ஆவல். ஆனால்,பிள்ளைகள் நலிவடைந்து நோய்க்காளாகின்றார்கள் என்பதைப் பெற்றோர்கள் உணர்வதில்லை. சனசமூக நிலையங்களிலும், தொழிற்சாலைகளிலும் பணிபுரியும் பெற்றோர்களுக்கு மாதம் ஒரு முறையாவது சுகாதாரக் கல்வி வழங்குவது சிறப்பாகும். இதற்கு சுகாதாரப் பணியாளர்கள், படித்த நலன்விரும்பிகள் முன்வந்து சுகாதார விழிப்புணர்வுகளை மக்களிடையே புகுத்துவதன மூலம் அல்சரா? சல ரோகமா? இரத்த அழுத்தமா? என்ற கேள்விக்கே இடமளிக்காமல ஆரோக்கியமான இளம் சமுதாயத்தை உருவாக்க முடியும் "நோய்வரு முன் காப்போம்".

நம் கிராமங்களிலும், நம் வீடுகளிலும் வளரும் இயற்கை தரும் மூலிகைகளையும், பால், பழம், இளநீர், தேன் போன்ற உணவுகளையும் உண்ணும் முறைகளை அறிநது அவற்றை நாளாந்த உணவில் சேர்த்து.

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்ற முதியோர் வாக்கை மெய்யாக்குவோம்"

அல்சர் நோயாளிகள் காரம், உறைப்பு, எண்ணெய் உணவுகளைக் குறைத்தல் நன்று. பான வகைகள், பழவகைகளை கூட்டி உண்பதால் உடலுக்குப் பலத்தைக் கொடுத்து ஜீரணக்கோளாறுகளைக் குறைக்கும். பிரண்டை, குப்பைமேனி, தும்பை, மாதுளை, தூதுவளை, திராட்சை, விளாங்காய், அகத்தி, மோர், தேன் இவற்றை நாளாந்த உணவில் சேர்த்து உண்பதால் வயிற்றுப் புண் ஏற்படாமல் தடுக்கலாம்.

காலம் தாழ்த்தி உண்பது, கவலை, ஒவ்வாத உணவுகளை உண்பது, பழைய உணவு, பழுதடைந்த பழங்கள், மரக்கறிகளை உண்பது, நித்திரை விழித்தல், கடின உழைப்பு, அதிக மாத்திரைகளை உண்பது, போதிய நீர் ஆகாரம் உணவில் சேர்க்காமை போன்ற பல காரணங்களினால் வயிற்றில் புண் ஏற்படுகின்றது. வயிற்றுப் புண் ஏற்பட்ட சில மாதங்களில் வயிறறில் நோ, பின்னர் தாங்க முடியாத குத்து ஏற்ப[illegible]

ஆரம்பத்தில் கவனமெடுப்பதால் குணமடையும். நாள்பட்டால் உடல் மெலிவு, மூட்டுகளில் நோ, வீக்கம, முரசு கரைதல், பற் கூச்சம், தலைமயிர் உதிர்தல், தேகம் வெளுறல், சில சமயம் உடல் மெலிவு அல்லது உடல் வீக்கம், கை கால்களில் சோர்வு, கண் மங்கல், தலைவலி, சுவாசக் கஷ்டம், ஞாபக மறதி, விளையாட்டில் ஈடுபாடின்மை, பசிமந்தம், மலபந்தம், பெண்களுக்கு மாதநோய சீரின்மை போன்ற குணங்களை பிள்ளைகளிடையே காணக்கூடியதாக இருக்கின்றது.

இவற்றிற்குக் காரணம் உரிய நேரத்தில் உணவு உண்ணாமை, பசித்த நேரத்தில் கச்சான், இனிப்பு ஐஸ்கிறீம் போன்ற வகைகளைப் புசிபபதால் உடலுக்கு போதிய ஆகாரமின்றி குடல் சுரப்புக்களில் கோளாறு ஏற்படுகின்றது. மேலும் நேரம் தவறி உணவு உண்பதால் ஜரண சக்தி முழுமையாக நடைபெறுவதில்லை. சரியான ஜீரண சக்தியின்மையால் சத்தான உணவு உண்டாலும் உடலில் சக்தி சேர்வதில்லை.

எனவே, சிறுவர்களின் அன்றாட உணவில் கவனம் எடுப்பது பெற்றோர்களின் முக்கிய கடமைகளில் ஒன்றாகும்.

"வளரும் பிள்ளையை மண் விளையாட்டில் தெரிவும்" பிள்ளைகளின் ஆரோக்கியம் சிறு வயதிலே முக்கியமாக கறபத்திலேயே பேணப்படவேண்டும்.

'ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது என்பர்" விளையாட்டாக இருந்தாலும் சரி, ஆரோக்கியமாக இருந்தாலும் சரி சிறுவயதிலேயே உண்ணும் உணவிலும் பழக்க வழககங்களிலும் பெற்றோரும் பெரியவர்களும் ஆசிரியர்களும் கவனம் எடுப்பதால் ஆரோக்கியமான நல்லொழுககமுள்ள சமுதாயத்தை உருவாக்கலாம். □

**வைத்தியகலாநிதி**
**திருமதி நா.புருஷோத்தமன்**

# சட்டவிரோத மதுபான உற்பத்தி யாழ். மாவட்டத்தில் அதிகரிப்பு

## இதனால் பல்வேறு குற்றச்செயல்களும் அதிகரிப்பு

(தென்மராட்சி)

யாழ்ப்பாண மாவட்டத்தில் இருக்கின்ற சட்ட விரோதமான மதுபான உற்பத்தயும், களஞ்சியப் படுத்தலும், விற்பனையும் மிகவேகமாக அதிகரித்து வருகிறது.

இதன் காரணமாக மதுபானம் பாவிப்பவர்களின் தொகையும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. அதன் பொருட்டு மாவட்ட மட்டத்தில சமூக விரோதச் செயல்களும், திருட்டுச் சம்பவங்களும், வாகன விபத்துககளும் அதிகரித்துள்ளன.

இதனால் மாவட்டத்தில் அமைதி அற்ற நிலை தோன்றி வருகின்றது என பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, யாழ்ப்பாணம் மதுவரித் திணைக்களப் பகுதியில் மட்டும் கடந்த வருடம் சட்டவிரோதமான முறையில் மதுபானம் வைத்திருந்தமை காரணமாக 408 பேருக்கு எதிராக வழக்குகள் செய்யப்பட்டிருநததாக மதுவரித் திணைக்களப புள்ளி விபரங்கள் மூலம் தெரிய வருகின்றது.

இது தொடர்பாக குற்றம் சாட்டப்பட்டவாகளுக்கு நீதிமன்றம் மூலம் தண்டனைகளும் அபராதங்களும் விதிக்கப்பட்டிருந்த போதிலும் கூட, சட்டவிரோதமான மதுபானங்களை வைத்திருத்தலும், விற்பனை செய்தலும் குறைந்தபாடாக இல்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இதேசமயம,யாழ். மாவட்டத்தில மதுபானப் பாவனையைப் பொது மக்கள் மத்தியில் இல்லாமல் செய்வதற்கான பல்வேறு வகைப்பட்ட விழிப்புணர்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ள போதிலும் கூட, மதுபானம் பாவிப்பவர்களின் எண்ணிக்கை குறைந்தபாடாக இல்லையென்பதும் குறிப்பிடத்தக்கது.

(ற-16)

# வன்னியிலிருந்து யாழ் செல்வோர் மீது விசாரணை

## புலனாய்வுத்துறையினர் நடவடிக்கை

(கிளிநொச்சி)

வன்னியிலிருந்து யாழ்ப்பாணம் வரும் பயணிகளை முகமாலையில் உள்ள இராணுவப் புலனாய்வுத்துறைப் பிரிவினர் விசாரணைகளுக்கு உட்படுத்துவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால், பயணிகள் பெரும் சிரமமடைவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு பயணம் செய்வோரை தடுத்து நிறுத்தி விசாரணைகளை மேற்கொள்ளும் படைத் தரப்பினர் வன்னியில் உள்ள புலிகள் பற்றியும் அவர்களது தொழில்த்துறை நடவடிக்கைகளையும் கேட்டறிவதில் மிகுந்த ஆர்வம் காட்டி வருவதாகவும் குறிப்பிடப்படுகிறது.

படையினரின் இவ்வாறான நடவடிக்கைகள் பயணிகள் மத்தியில் அச்ச உணர்வை ஏற்படுத்தி வருவதுடன், பயணத்தாமதம் ஏற்படுவதாகவும், சமாதான சூழ் நிலையில் பயணம் செய்யும் தம்மீது ஏன் இவ்வாறான நடவடிக்கைகள் எனவும் வன்னி மக்கள் விசனம் தெரிவித்தனர்.

எனவே, பயணிகள் மீதான படைத் தரப்பு விசாரணைகள் நிறுத்தப்பட்டுத் துரிதமாகப் பயணம் செய்ய வழிசெய்யப்பட வேண்டும் எனவும் வன்னியிலிருந்த யாழ். செல்லும் பயணிகள் தெரிவித்தனர்.

(ப)

உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார் - குறள்

வலம்புரி

## அகிம்சைவழிப் போராட்டங்களை அக்கறையோடு கவனிக்கவேண்டும்

ஈழத்தமிழர்களின் ஆயுதப் போராட்டம் என்பது திடீரென ஏற்பட்டதன்று. தமிழ்த் தலைவர்கள் எத்தனையோ அகிம்சைவழிப் போராட்டங்களை நடத்தி அவை தோற்றுப்போனதன் முடிவிலேயே ஆயுதப் போராட்டம் ஆரம்பமாகியது. அகிம்சைவழிப் போராட்டத்தின் இறுதிக்கட்ட ஜனனிப்பே ஆயுதப் போராட்டமெனலாம்.

அகிம்சைப் போராட்டங்கள் அக்கறையோடு பொருட்படுத்தப்பட்டிருக்குமாயின் இலங்கைத் தீவில் ஆயுதப் போராட்டம் என்பதற்கான தேவைப்பாடு இருந்திருக்கமாட்டாது. அன்றுவிட்ட தவறின் விளைவை இன்று நாடு அனுபவித்துக்கொண்டிருக்கின்றது.

இங்கு தவறு என்ற விடயத்தில் இருதரப்புக்கள் சம்பந்தப்பட்டுள்ளன. அதிலொன்று பெரும்பான்மைப் பலத்தைக் கொண்டுள்ள சிங்கள அரசுகள். மற்றையது வெளிநாடுகள்.

ஈழத்தமிழர்களின் உரிமை விவகாரத்தில் சிங்கள அரசுகள் உகந்த அணுகுமுறையை கையாளவில்லை. இதன் காரணமாகவே விடுதலைப் போராட்டம் முகிழ்ப்புப்பெற்றது என்ற வாதம் ஏற்றுக்கொள்ளத்தக்கது. ஆனால் அந்தத் தவறுக்கு வெளிநாடுகளும் காரணமென்ற கூற்று எந்தளவு தூரம் நியாயமானதென்ற வினவல்கள் எழுவதும் தவிர்க்கமுடியாததே.

அவ்வாறு வினவல்கள் எழுகின்றபோது அதற்கான விளக்கங்கள் வழங்கப்படவேண்டியது கட்டாயமானதாகும். அதாவது ஈழத்தமிழர்கள் காலத்துக்குக் காலம் சிங்களப் பேரினவாத அரசுகளால் நசுக்கப்பட்ட வேளைகளில் எல்லாம் உலக நாடுகள் மௌனம் சாதித்தன.

தமிழ்மக்கள் தங்கள் உரிமைகளுக்காக நடத்திய அகிம்சைப் போராட்டம் ஏராளம். எனினும் அவை குறித்து அண்டைநாடுகள் உட்பட சர்வதேச சமூகம் வாய்மூடி மௌனித்துப்போயிருந்தன.

ஊர்வலங்கள், பேரணிகள், கடையடைப்புக்கள், கவனயீர்ப்புப் போராட்டங்கள், துக்கதின அனுஷ்டிப்புக்கள், உண்ணாவிரதங்கள், ஙகையெழுத்துப் போராட்டங்கள் இவ்வாறு அகிம்சைவழியில் இருக்கக்கூடிய அனைத்துப் போராட்ட வழிமுறைகளையும் தமிழ்மக்கள் செய்துவிட்டனர்.

இவ்விதம் அகிம்சைவழிப் போராட்டங்களை நடத்துகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பங்களின்போதும் தமது கோரிக்கை தொடர்பான மகஜர்களை தமிழ்மக்கள் அரசு, எதிர்க்கட்சி, வெளிநாட்டுத் தலைவர்கள், சர்வதேச பொதுஅமைப்புக்கள் என்பவற்றிற்கு அனுப்பத் தவறுவதில்லை. குறிப்பாக யாழ்ப்பாணத்தில் இயங்கும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், யு.என்.எச்.சி.ஆர் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் கிளை அமைப்புக்களுக்கு இந்த மகஜர்கள் கையளிக்கப்பட்டன.

மேற்குறிப்பிட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகளும் இந்த மகஜர்களை மனமுவந்து பெற்றுக்கொண்டனர். ஆனால் முடிவுகள் எதுவுமில்லை.

இவ்வாறு தமிழ்மக்கள் நடத்திய அகிம்சைவழிப் பேராட்டங்கள் குறித்து சர்வதேச சமூகம் தனது பார்வையை இலங்கை மீது திருப்பியிருக்குமாக இருந்தால் இந்த யுத்தத்தை நிறுத்துங்கள், சமாதானப் பேச்சுக்களை ஆரம்பியுங்கள் எனக் கோரவேண்டிய தேவைப்பாடு இருந்திருக்கமாட்டாது.

இந்நிலையிலேயே வெளிநாடுகளும் தவறிழைத்துவிட்டன என்ற குற்றச்சாட்டுக்களும் நியாயப்படுகின்றது.

இங்கு, இலங்கையில் ஏற்பட்ட யுத்தத்திற்கான காரண கர்த்தாக்களை அம்பலப்படுத்துவதும், அதற்குத் துணைபோனவர்களை வெளிப்படுத்துவதும் நோக்கமல்ல. ஆனால் அன்றுவிட்ட தவறை மீண்டும் ஒருமுறை தவறியேனும் விடாமல் இருப்பதற்காக வரலாற்றின் பாதையை திரும்பிப்பார்ப்பது தேவையானதொன்றாகும்.

ஆக இலங்கை அரசும், சர்வதேச சமூகமும் அன்றுவிட்ட தவறை மீண்டும் ஒருமுறை விடாமல் இருப்பதற்காக - தமிழ்மக்கள் வழங்கும் இறுதிச் சந்தர்ப்பமாக நாளை நடைபெறவிருக்கும் மாபெரும் பேரணியைக் கவனத்தில்கொள்ளவேண்டும்.

# பேச்சுக்கள் மீள ஆரம்பிக்கப்படாவிட்டால் நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த முடியாது

## -எரிக்சொல்ஹெய்ம்



(கொழும்பு)

**தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் அரசாங்கத்துக்குமிடையில் தடைப்பட்டு தேக்க நிலையிலுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகள் மீள ஆரம்பிக்கப்படாவிட்டால் நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த முடியாது என நோர்வேயின் இலங்கைக்கான விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் சுட்டிக்காட்டியுள்ளார்.**

தனியார் ஊடகமொன்றுக்கு அளித்த விசேட பேட்டியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் யோசனைகளில் ஒனறான இடைக்கால நிர்வாகசபை கோரிக்கை அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்பட்ட போதும் அதை வழங்குவது, நடைமுறைப்படுத்துவது தொடாபாக அரசாங்கமே தீர்மானிக்கவேண்டும்.

வடக்கு-கிழக்கு மாகாணத்திற்கான இடைக்கால நிர்வாசபை தொடர்பான எந்தவொரு நிலைப்பாட்டுக்கும் வரவேண்டிய அவசியம் நோர்வே அரசுக்கு இல்லை.

விடுதலைப்புலிகளுக்கும் அரசாங்கத்துக்குமிடையில் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்து வைப்பதற்கான சிறந்த சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுக்கும் பொறுப்பு மாத்திரமே நோர்வே அரசுக்கு உணடு.

அரசியல் கட்சிகள் வேற்றுமைகளால் பிளவுபட்டிருக்கும் வரை பிரச்சினைகளுக்குத தீர்வு காண்பதற்கான வாய்ப்புகள் கிட்டாது. அரசியல் கட்சிகள் வேற்றுமைகளைக் கைவிட்டு ஒன்றுபட வேண்டியது அவசியம் எனவும் எரிக் சொல்ஹெய்ம் மேலும் தெரிவித்தார். (ற-8)

# புரிந்துணர்வு உடன்படிக்கையை அடிப்படையாக வைத்து சமாதானப் பேச்சுக்கள் மீள ஆரம்பிக்கப்படவேண்டும்

## எமது நிலைப்பாடு இதுவே என்கிறார் ஜீ.எல். பீரிஸ்

(கொழும்பு)

**அரசுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்குமிடையில் கைச்சாத்திடப்பட்ட போர்நிறுத்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் சமாதானத்திற்கான இறுதித் தீர்வாகாது. போர்நிறுத்தத்தை அடிப்படையாக வைத்து பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படவேண்டுமென்பதே ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடு என்று கட்சியின் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.**

ஐக்கிய தேசியக் கட்சி விடுத்துள்ள அறிக்கையிலேயே ஜீ.எல்.பீரிஸ் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.



சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிப்பதில் பல்வேறு நெருக்கடிகள் தோன்றியுள்ளன. இந்த நெருக்கடிகளைக் களைந்து பேச்சுக்களை மீள ஆரம்பிப்பது அரசின் கடமையாகும்.

அடிப்படைப் பிரச்சினைகள் தொடர்பில் அரசாங்கதுககும் அதில் அங்கம் வகிக்கும கட்சிகளுக்குமிடையே இணக்கப்பாடொன்று இல்லை. இவ்வாறான இணக்கப்பாடு இல்லாத குழப்பமான சூழ்நிலையில் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க முடியாது. இந்நிலையில் இந்த விடயங்கள் தொடர்பில் இணக்கப்பாட்டை ஏற்படுத்திக்கொள்வதற்கு அரசாங்கம் முன் நின்று செயற்படவேண்டும் எனவும் மேற்படி அறிக்கையில் ஜீ.எல்.பீரிஸ் சுட்டிக்காட்டியுள்ளார். (ற-8)

## வர்த்தகர்களின் கவனத்திற்கு!

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்கள் கடந்த இருபது ஆண்டுகளாக யுத்தத்தால பாதிக்கப்பட்ட பின் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு மூன்று வருடங்கள் யுத்த நிறுத்தம் ஏற்பட்ட போதும், அதனால் இயல்பு வாழ்க்கை மக்களுககு ஏற்படுமென எதிர்பார்த்து இருந்தும் மக்களுக்கு இயல்பான சகஜநிலை வாழ்க்கை ஏற்படவில்லை.

ஆகவே இதனை வலியுறுத்தி ஏழு அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து நாளை புதன்கிழமை நடைபெறும் பேரணியில் யாழ். மாவட்டத்தில் உள்ள சகல வர்த்தக சங்கங்களையும் சேர்ந்த வர்த்தகப் பெருமக்களும் தமது வர்த்தக ஸ்தாபனங்களைப் பூட்டி தமது வர்த்தக ஊழியர் சகிதம் இப்பேரணியில் பங்குபற்றி மக்களின் சுபீட்சத்திற்காகப் பாடுபடவேண்டுமென யாழ். மாவட்ட வர்த்தக சங்கங்களின் சம்மேளனம் அழைப்பு விடுத்துள்ளது. (ப)

## கைத்தொழில் முயற்சிகளை பதிவுசெய்ய நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

சிறிய மற்றும் கிராமியக் கைத்தொழில் அமைச்சு நாடெங்கிலுமுள்ள கைத்தொழில் முயற்சியாளர்களைப் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது. அதன்படி யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்துப் பிரதேச செயலகங்களுக்கும் இதற்கான விண்ணப்பப் பத்திரங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

எனவே குறித்த பகுதியிலுள்ள கைத்தொழிலாளர்கள் அனைவரையும் தத்தமது பிரிவுக்குரிய பிரதேச செயலகங்களில் எதிர்வரும் 21ஆம் திகதிக்கு முன்னராகத் தம்மைப் பதிவு செய்யுமாறு கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் வடமாகாணப் பிரதிப் பணிப்பாளர் தெ.பாலசுப்பிரமணியம் கேட்டுள்ளார். இப்பதிவுகள அனைத்தும் கைத்தொழில் அமைச்சில பதிவு செய்யப்படவுள்ளன. (ற)

### எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்

## வேலையற்ற பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்க நடவடிக்கை

(கொழும்பு)

வேலையற்ற பட்டதாரிகளுக்கு அரசாங்கத் துறையில் நிரந்தர வேலைவாய்ப்பைப் பெற்றுக் கொடுப்பதறகான நடவடிக்கைகள் விரைவில் மேற்கொள்ளப்படுமென பிரதி நிதியமைச்சர் ரஞ்சித் சியாம்பலப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

அமைசசுக்களிலும், மாகாண சபைகளிலும் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு இம்மாதம் 10ஆம் திகதிக்கு முன் நடவடிக்கை எடுக்கப்படும்.

இதுதொடர்பான இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு சகல விபரங்களையும் நிதியமைச்சு பெற்றுள்ளது. இதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரமும் கிடைத்துள்ளது.

இதற்கெனத் தெரிவு செய்யப்படுபவர்களில் எழுத்துப்பரீட்சை தேவைப்படாத பதவிகளுக்கான நேர்முகப் பரீட்சைகள் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 12ஆம் திகதிக்கு முன நடாத்தப்பட்டு இதில் தெரிவு செய்யப்படுபவர்களுக்கு நியமனக்கடிதம் ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி வழங்கப்படும்.

எழுத்துப் பரீட்சைகள் மூலம் தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்திகளுக்கான நியமனக்கடிதங்கள் மே மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் வழங்கப்படும் என்றும் பிரதி நிதியமைச்சர் ரஞ்சித் சியாம்பலப்பிட்டிய மேலும் தெரிவித்தார். (ற-8)

## திசைரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

நாம் முன்பு செய்த தீவினைகளெல்லாம் இப்போது செய்யும் நற்காரியங்கள் நிறைவேறத் தடையாக வந்து நிற்கின்றன. எனினும் முயற்சியாலும் இறைவன் கிருபையாலும் வெற்றிபெற முடியும் என்று உறுதி நமக்கு வேண்டும். நாம் யார் என்பதை முதலில் உணர்ந்துகொள்ள வேண்டியதை ஏற்றும், தள்ள வேண்டியதைத் தள்ளியும் வாழவேண்டும்.

சுவாமி விவேகானந்தர்

க.பொ.த உயர்தரப் பெறுபேற்றின் அடிப்படையில்

# ஆசிரிய நியமனம் பெற்றவர்களின் விபரங்கள் நேற்று வெளியாகின

(யாழ்ப்பாணம்)

க.பொ.த உயர்தரப் பெறுபேற்றின் அடிப்படையில் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றியவர்களில் 600 பேருக்கு ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்படவுள்ளன. அவர்களில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்தவர்களின் பெயர் விபரங்கள் நேற்று வெளியாகியுள்ளன.

தீவக வலயத்திற்கு உட்பட்ட பாடசாலைகளுக்கு 45 ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்களின் பெயர் விபரம் வருமாறு,

**உ.ந.உ.தொ.நு**

செபஸ்ரியாம்பிள்ளை டெனேசன் புஸ்பகரன், சுப்பையா இளங்கோவன், பரமநாதன் விஜயகுமார், சபாரத்தினம் யசோதரன்.

**உடற்கல்வி**

திருச்செல்வம் துஸ்யா, திருநாவுக்கரசு சாமினி, பிரகாசராசா யூலி, நடராசா கந்தலீலா, ஜெயபாலரட்ணம் ஜெயதர்சினி,

**ஆரம்பக்கல்வி**

ஜெயவதனி பவளகாந்தன், சுபாசினி சுகுமார், அனித்தா கணேசரத்தினம், ரதனி செல்லையா, பொற்செல்வி பிறைசூடி, கவிதா சந்திரகுமார், கோமகள் செல்வரத்தினம், ஜெயரூபி மயில்வாகனம், தமிழ்ச்செல்வி நடராஜா, சுஜிதா பரமதாஸ், தர்மினி நடராஜா, இந்துவாணி பரமேஸ்வரன், நவீந்தினி நடேசமூர்த்தி, உசாந்தினி கணேசு, ஆன்ஜெயசாமினி பேரின்பநாதன், சசிகலா சின்னராஜா, தாரணி கணேசமூர்த்தி, தயாளினி சிறிஸ்கந்தராசா, தேவகி சதாநந்தன், ரஜனிதேவி நடராஜா, சிறிகேதாரேஸ்வரி கணபதிப்பிள்ளை.

**ஆங்கிலம்**

சுரேகா தங்கராஜா, தேன்மொழி கிரிதரன், ரெஜினா கவிதா, சத்தியவாணி மகாலிங்கம், இந்துரேகா திருநாவுக்கரசு, கௌசீதகி யசீதரன், அபர்ணா ஞானேஸ்வரன், சாரங்கா பாலகிருஷ்ணேஸ்வரன், யூடாசுசந்தி அமலதாசன், தனுஷா லக்சுமணன், கௌசிகா சண்முகநாதன், தமிழினி ஜெயக்குமார், யசிலா பரமேஸ்வரநாதன், தயாளினி குகராசன், ராதிகா ராஜதுரை.

**ஏனைய வலயங்களுக்கு நியமனம் பெற்றவர்களின் பெயர் விபரங்கள் நாளைய வலம்புரியில் வெளிவரும்.**

## பாதிக்கப்பட்ட...

அரசின் புனரமைப்பு புனர்நிர்மாண திட்டங்கள் குறித்து ஜனாதிபதி இளவரசர் சாள்ஸிடம் எடுத்துரைத்தார்.

அனர்த்தம் ஏற்பட்டவுடன் பிரிட்டிஷ் அரச குடும்பம் அனுதாபம் தெரிவித்தமைக்கும், பிரிட்டிஷ் மக்கள் பாரிய உதவியளித்தமைக்கும் ஜனாதிபதி நன்றி தெரிவித்தார்.

சமாதான முயற்சிகளின் தற்போதைய நிலைமை குறித்தும், விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பது குறித்தும் பொதுக்கட்டமைப்பு ஒன்றினை உருவாக்குவது குறித்தும் இளவரசர் சாள்ஸுக்கு ஜனாதிபதி விளக்கமளித்தார்.

இந்த சந்திப்பில் பிரதமர் மகிந்த ராஜபக்ஸ வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர், துணை வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் விஸ்வ வர்ணபால ஆகியோரும் கலந்துகொண்டனர்.

சுமார் 40 நிமிடம் நடைபெற்ற இந்த சந்திப்பின் பின்பு அங்கிருந்து உலங்குவானூர்தி மூலம் நேரடியாக விமான நிலையத்தை சென்றடைந்து அங்கிருந்து அவுஸ்ரேலியா பயணமானார்.

98 ஆம் ஆண்டு மாசி மாதம் 4 ஆம் திகதி இலங்கையின் 50 ஆவது சுதந்திர வைபத்திற்கு வருகைதந்த பின்பு இலங்கைக்கு மேற்கொண்ட முதலாவது விஜயம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது.(க-4)

## சுனாமி...

திருச்செந்தூர் முருகன் ஆலயத்தில் நடைபெற்ற விசேட பூசை வழிபாட்டிலும் அவர் கலந்துகொண்டார்.

இதன் பின்னர் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைப் பார்வையிட்டதோடு அங்கு இடிபாடுகளை அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த இலங்கை செஞ்சிலுவைச்சங்க குழுவின் தொண்டர்களையும் சந்தித்து உரையாடினார். அதனைத்தொடர்ந்து பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்து அளவளாவினார். இக்குழுவினர் பாதிப்புக்கள் மற்றும் இழப்புக்கள் தொடர்பாக இளவரசர் சார்ள்சுக்கு விளக்கியதோடு, நிவாரணப்பணிகளிலும் புனரமைப்பு பணிகளிலும் ஏற்படுகின்ற தாமதங்கள் குறித்தும் தமது அதிருப்தியை எடுத்துக் கூறினர். பின்பு அங்கிருந்து மட்டக்கழி, பாலமீன்மடு ஆகிய பகுதிகளுக்கு விஜயம்செய்து பாதிக்கப்பட்ட மக்கள் தங்கியுள்ள நலன்புரி நிலையங்களில் உள்ள மக்களை சந்தித்தார்.

இந்த சந்திப்பில் அரசாங்க அதிபரிடம் மக்களுக்கான தற்காலிக மற்றும் நிரந்தர குடியிருப்பு வசதிகள் தொடர்பாக கேட்டறிந்து கொண்டார்.

அவர் மட்டக்களப்பிலிருந்து கொழும்பு நோக்கி புறப்படும்வரை வெபர் விளையாட்டரங்கிலும், அதனைச்சுற்றியுள்ள பகுதிகளிலும் வெளியார் எவரும் நடமாட அனுமதிக்கப்படவில்லை. நேற்று முன்தினம் மாலை முதல் மட்டக்களப்பு நகரிலும் அவர் பயணம் செய்யவிருந்த பாதைகளிலும், பிரதேசங்களிலும் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டிருந்தன.

தமது இலங்கைக்கான ஆறு மணித்தியால விஜயத்தின்போது இளவரசர் சார்ள்ஸ இரண்டு மணித்தியாலத்தை மட்டக்களப்பில் செலவிட்டமை குறிப்பிடத்தக்கது.(ச)

## ஆட்டோவில்...

ஒன்றில் வந்த இனந்தெரியாத நபர்கள் ஆட்டோவை வழிமறித்து ஆட்டோவிலிருந்த போராளிகள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தினர்.

இதில் மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் உட்பட சசிமதி, அகநிலா ஆகிய போராளிகள் காயமடைந்தனர். காயமடைந்தவர்களை உடனடியாக அம்பாறை அஷ்ரப் வைத்தியசாலைய்யில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (த)

## 3 இராணுவ...

வழங்கப்பட்டிருப்பதாக ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

சிரேஷ்ட இராணுவ உயர் அதிகாரிகள் ஒரே நேரத்தில் சேவையிலிருந்து ஓய்வு பெறுவது இராணுவ நிர்வாகத்திற்கு குந்தகமாக அமையுமென்பதாலேயே அவர்களுககுச் சேவைநீடிப்பு வழங்கப்படுவதாக ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.(த-04)

## எரிக்சொல்ஹெய்ம்...

ஆண்டின் நிறைவையொட்டி கொழும்பில் நடைபெற்ற நிகழ்வுகளில் கலந்துகொண்டார்.

அத்துடன் சமாதானப் பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பாக அரச மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளின் உயர்மட்டத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தையிலும் ஈடுபட்டிருந்தார்.

இந்தியா செல்லும் சமாதானத் தூதுவர் சமாதான பேச்சுவார்த்தைகளின் தற்போதையநிலை குறித்து இந்தியத் தலைவர்களுக்கு விளக்குவார் என நோர்வேத் தூதரகம் தெரிவித்துள்ளது. (த-04)

## நாளை...

யாழ். குடாநாட்டில் மாபெரும் கண்டனப் பேரணி நடைபெறவுள்ளது.

இதற்கான ஏற்பாட்டை யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் மேற்கொண்டுள்ளது. வடமராட்சி தென்மராட்சி வலிகாமம் மற்றும் தீவகம் ஆகிய பகுதிகளிலிருந்து வருகை தரும் மக்கள் யாழ். பல்கலைக்கழக முன்றலில் ஒன்றுகூடுவர்.

அங்கிருந்து காலை 10 மணிக்கு பேரணி ஆரம்பமாகும். பலாலி வீதியூடாக கந்தர்மடசந்தியைச் சென்றடைந்து நல்லூர்க் கந்தசுவாமி கோயிலூடாக அகதிகளுக்கான ஐக்கியநாடுகள் சபையின் யாழ். காரியாலயத்தைப் பேரணி சென்றடையும்.

அங்கு மகஜர் கையளிக்கப்படும். பின்னர் இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கான மகஜர் கையளிக்கப்படும். தொடர்ந்து இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்திடம் மகஜர் கையளிக்கப்படும்.

தொடர்ந்து செல்லும் பேரணி ஆஸ்பத்திரி வீதியூடாக யாழ். செயலகத்தை சென்றடையும். அங்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கான கடிதத்தை யாழ். அரச அதிபர் கே.கணேசிடம் யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர கையளிப்பார்.

இம் மாபெரும் கண்டனப் பேரணியில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு பொது அமைப்புக்களின் ஒன்றியம் கேட்டுள்ளது.

இதேவேளை யாழ். மாவட்ட வணிகர் கழகம், யாழ். பல்கலைக்கழக சமூகம், யாழ். மாவட்ட பாடசாலைச் சமூகம் மற்றும் பொது அமைப்புக்கள் தமது பூரண ஆதரவை வழங்க முன்வந்துள்ளன.

வர்த்தக நிலையங்களைப் பூட்டி பேரணிக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு வணிகர் கழகம் கேட்டுள்ளது. (ச)

# சுனாமியில் வீடுகளை இழந்தோர் ரூபா 2 1/2 இலட்சம் பெறமுடியும்

(கொழும்பு)

சுனாமி கடற்பேரலையினால் வீடுகளை இழந்த ஒவ்வொருவருக்கும் தலா இரண்டரை லட்சம் ரூபாவை வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்த நிதியானது இரண்டு கட்டங்களாக வழங்கப்படும் என்று வீடமைப்பு அதிகார சபை அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

வீட்டிற்கு 40 சதவீதத்திற்கு மேற்பட்ட பாதிப்பு ஏற்பட்டிருந்தால் இந்நிதி கிடைக்கும் என அவர் குறிப்பிட்டார்.

சுனாமி அனர்த்தத்தினால் நாடுமுழுவதும் 75 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகள் நிர்மூலமாக்கப்பட்டுள்ளதாக வீடமைப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது.

100 மீற்றர் எல்லைக்குள் அழிந்த வீடுகளை மீண்டும் கட்டுவதற்கோ, அந்தக் காணிகளில் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கோ எவ்வித நிதியும் வழங்கப்படமாட்டாதென வீடமைப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதற்குப் பதிலாக மாற்றிடங்களில் வீடுகள் அமைத்துக்கொடுக்கப்படவுள்ளன. (த-4)

# எழுதுவினைஞர் பதவிக்கு வெட்டுப்புள்ளி குறைப்பு

அரசாங்கத்துறையில் நிலவுகின்ற வெற்றிடங்களை நிரப்புவதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்படுமென பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

2002 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட எழுதுவினைஞர் போட்டிப் பரீட்சையின் முடிவுகளின் அடிப்படையில் இந்த வெற்றிடங்களுக்கு உரியவர்கள் இணைத்துக்கொள்ளப்படவுள்ளதாக ஒன்றிணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஐயம்பதி ஹெட்டியராட்சி தெரிவித்துள்ளார்.

இந்தப் போட்டிப் பரீட்சையின் பெறுபெறுகளின் அடிப்படையில் 3 ஆயிரம் பேர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டபோதிலும் அவர்களில் போதுமானளவு பேரை தெரிவுசெய்யமுடியாதநிலை ஏற்பட்டுள்ளது.

இந்த நேர்முகப் பரீட்சைக்கென 1600 பேர் மாத்திரமே சமுகமளித்திருந்தனர். இதனால் சகல மாவட்டங்களுக்குமான வெட்டுப்புள்ளிகளை இரண்டு புள்ளிகளால் குறைக்க தீர்மானிக்கப்பட்டது. இவர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் இவ்வாரத்தில் நடைபெறும்.

இந்த நேர்முகப் பரீட்சையின்போது தெரிவுசெய்யப்படுவோர் எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி முதல் பொதுநிர்வாக சேவையில் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர். நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவோர் க.பொ.த சாதாரணதரப் பரீட்சைக்கு மேலதிகமாக உயர்தரப் பாடத்தில் மூன்று பாடத்தில் சித்தியடைந்திருத்தல் அவசியம் எனவும் அவர் தெரிவித்தார். (த-04)

## பொன்விழா

இருபாலை எக்ஸ்பிரஸ் கல்விநிலைய இயக்குநர் த.வரதராஜாவின் பொன்விழா நிகழ்வு இன்று பிற்பகல் 3.45 மணிக்கு எக்ஸ்பிரஸ் கல்விநிலைய பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக வணிகத்துறைத் தலைவர் க.தேவராஜா தலைமையில் இந்நிகழ்வு நடைபெறும். (ச)

## இல்லமெய்வல்லுநர் போட்டி

யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 2.30 மணிக்கு அதிபர் எம்.எஸ்.ஏ.எம்.முபாறக் தலைமையில் கல்லூரியின் ஜின்னா மைதானத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக யாழ். கோட்டக்கல்விப் பணிப்பாளர் எஸ்.எஸ்.தங்கராஜா, சட்டத்தரணி ஜனாப் எம்.எம்.எம்.றமீஸ் ஆகியோர் கலந்துகொள்கின்றனர். (த)

## ஆளும்...

கம்பஹாவில் மாகாண சபை அமைச்சர்கள் மற்றும் பிரதேச சபை அங்கத்தவர்கள் மத்தியில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அரசாங்கத்தை குழப்பமடையவிடாமல் பாதுகாப்பது ஜே.வி.பியின் பொறுப்பாகும். அக் கட்சி ஜனாதிபதியுடன் பல்வேறு வகையில் முரண்பட்டுவருகிறது. இதனால் அரசாங்கம் துண்டாக பிளவுபடுமென அனைத்துத் தரப்பினரும் எதிர்வுகூறுகின்றனர்.

ஆனால் இது உண்மையல்ல. வாழ்க்கைச் செலவீன அதிகரிப்பு, வேலைவாய்ப்பின்மை, இனப்பிரச்சினை போன்றவற்றிற்கு உடனடியாகத் தீர்வுகாணும் என உறுதியளித்தே இந்த அரசு ஆட்சிக்கு வந்தது.

சுனாமி கடல் அனர்த்தத்திற்கு மத்தியிலும் இப் பிரச்சினைக்கு தீர்வுகாண ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துவருகிறார். அவரின் செயல்களை பாராட்டாமல் குறைகளைக் கண்டுபிடித்து அதற்கு விளக்கம் கூறிவருகிறது ஐக்கிய தேசியக் கட்சி.

அத்துடன் அரசாங்கத்தை கவிழ்த்துவிட்டு ஜனாதிபதி சந்திரிகாவை ஜனாதிபதி பதவியிலிருந்து தூக்கி எறிவதற்கும் ஐக்கிய தேசியக் கட்சி நடவடிக்கை எடுத்துவருகிறது. இச் செயல் மக்கள் வழங்கிய ஆணையை மீறும் செயலாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (த-04)

## அரசுடன்....

பதவியை இராஜினாமாச் செய்தனர்.

இதனால் ஏற்பட்ட நெருக்கடி தொடர்பாக பேச்சுவார்த்தை நடாத்த ஜனாதிபதி விடுத்த அழைப்பினை ஏற்று இ.தொ.க. தலைவர் ஆறுமுகம் தொண்டமான் தலைமையில் ஜனாதிபதியைச் சந்தித்தோம்.

எம்முடைய 14 அம்சக் கோரிக்கையினை ஏற்று செயற்படுத்துவதற்கு ஜனாதிபதி ஒப்புக்கொண்டார்.

இராஜினாமா கடிதங்களை சமர்பித்த அமைச்சர்கள் இன்றிலிருந்து மீண்டும் அமைச்சர்களாகச் செயற்படுவார்கள். இச் சந்திப்பில் ஜனாதிபதியுடன் அமைச்சர்களான நிமால் சிறிபாலடிசில்வா, மங்கள சமரவீர, சுசில் பிரேம்ஜயந்த பாராளுமன்ற உறுப்பினர் விஜயதாஸா ராஜபக்ஷ ஆகியோர் கலந்துகொண்டனர். (04)


நாதன்ஸ் சினிமா
யாழ்ப்பாணம் [ஆஸ்பத்திரிக்கு முன்பாக]
குளிரூட்டியது
விக்ரம், திரிஷா, விவேக், விஜயகுமார் நடித்த
சாமி
தினசரி 10.30, 2.30 6.30, 9.30
எமது அடுத்த வெளியீடு
தாவடி மைந்தன் நடிக்கும் குருதேவா

நிறைஞ்சனாஸ் சினிமா
சங்கானை
ஜெயம் ரவி, அஸின், நதியா, விவேக் நடித்த



M குமரன் SON OF மகாலட்சுமி
கா.நே: 11.00, 2.45, 6.00

மனோகரா யாழ்.
இளையதளபதி விஜய், ரவி கிருஷ்ணா, நதிஷா, ரம்பா



இயக்கம்: S.A. சந்திரசேகரன்
சுக்ரன்
கா.நே: 10.30, 2.30 6.30, 9.30
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடு


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.03.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.